பக்கங்கள்:12 விலை : 30/-

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 சித்திரை 06 செவ்வாய்க்கிழமை 19.04.2022 கதிர் 165

### இனிது ரகசியம் அல்ல!

ஜனநாயக உரிமைகள் கூடினால் எல்லோரும் இந்நாட்டு மன்னர்கள் ஆகிவிடுவர். தற்போதைய நாடாளுமன்றத்திலும் ஜனநாயக உரிமைகள் அதிகம் போலும். அதனால்தான் கட்சிக் கட்டுப்பாடின்றி குத்துக்கரணங்களும் பல்டிகளும் ☞2

# அரசைத் திருத்த இளைஞர்கள் போராடுவதில் தவறு இல்லை!

## இறங்கி வந்தார் கோட்டா



நாட்டை உண்மையாக நேசிக்கும் இளைஞர்கள் தற்போதைய ஆட்சியின் தவறுகளைத் திருத்தி நாட்டைக் கட்டியெழுப்புவதற்காக ஜனநாயக வழியில் போராடுவதில் எந்தத் தவறும் இல்லை. எனவே, உங்கள் ஜனநாயகப் போராட்டங்களை வன்முறைப் பாதையில் திசை திருப்ப சந்தர்ப்பவாதிகளுக்கு இடமளிக்க வேண்டாம் என்று இந்த இளைஞர்களிடம் கேட்டுக்கொள்கின்றேன்.

– இவ்வாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நேற்று தெரிவித்தார். ☞2

## தாம் விட்ட தவறுகளை ஒப்புக்கொண்ட கோட்டா

### அவற்றைச் சரி செய்து கொண்டே முன்னேற வேண்டும் என்கின்றார்

எங்களாலும் பல தவறுகள் இடம்பெற்றுள்ளன. அவை சரி செய்யப்பட வேண்டும். அவற்றைச் சரி செய்து கொண்டே நாம் முன்னேற வேண்டும். மக்களின் நம்பிக்கையை மீண்டும் பெற வேண்டும்.

– இவ்வாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நேற்று தனது உரையில் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

கடந்த இரண்டரை வருடங்களாக நாங்கள் பெரும் சவால்களை எதிர்கொண்டுள்ளோம். கொரோனாத் தொற்றுநோய் அதேபோன்று கடன் சுமை போன்ற விடயங்கள். அவ்வாறிருந்தாலும் எங்களாலும் பல தவறுகள் இடம்பெற்றுள்ளன. அவை சரிசெய்யப்பட வேண்டும். அவற்றைச் சரிசெய்து கொண்டே நாம் முன்னேற வேண்டும். மக்களின் நம்பிக்கையை மீண்டும் பெற வேண்டும்.

சர்வதேச நாணய ☞2

## அன்றும் இன்றும் என் கைகள் சுத்தம்

### இப்படிக் கூறுகின்றார் கோட்டா

அன்றும் இன்றும் என் கைகள் சுத்தமாகவே உள்ளன என்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்தார்.

நேற்று புதிய அமைச்சரவை பதவிப்பிரமாணம் செய்து கொண்டதன் பின்னர் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

அறுபத்து ஒன்பது இலட்சம் மக்கள் தமது வாக்குரிமையைப் பயன்படுத்தி மிகுந்த நம்பிக்கையுடன் என்னிடம் பொறுப்பை ஒப்படைத்தனர். எனது பதவிக் காலத்தில் அந்த எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுவதில் ☞2

## 24 இராஜாங்க அமைச்சர்கள் நேற்றுப் பதவிப் பிரமாணம்!

புதிய இராஜாங்க அமைச்சர்களின் பதவியேற்பு நிகழ்வு நேற்று மாலை நடைபெற்றது.

ஜனாதிபதி மாளிகையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

இதன்போது, 24 இராஜாங்க அமைச்சர்கள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ முன்னிலையில் புதிதாகப் பதவிப்பிரமாணம் செய்துகொண்டனர்.

## அரசமைப்பில் மாற்றம் செய்ய நான் ஒத்துழைப்பு வழங்குவேன்

### விசேட உரையில் ஜனாதிபதி உறுதி

அரசமைப்பில் ஏற்படுத்த வேண்டிய மாற்றங்கள் குறித்து பல்வேறு அரசியல் கட்சிகள் தெரிவித்த கருத்துக்களை நாடாளுமன்றத்தில் கலந்துரையாடி தேவையான மாற்றங்களை நிறைவேற்ற வாய்ப்பு உள்ளது. அது தொடர்பில் அவசியமான ஒத்துழைப்பை எந்த நேரத்திலும் நாடாளுமன்றத்துக்கு வழங்குவதற்கு நான் தயாராக உள்ளேன்.

– இவ்வாறு புதிய அமைச்சரவை பதவிப்பிரமாணம் செய்துகொண்டதன் பின்னர் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நேற்று ஆற்றிய விசேட உரையில் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

மக்களால் ☞2

## ‘20’ஐ ஆதரித்த அரவிந்குமாருக்கு ஜீவனின் இராஜாங்க அமைச்சு

அரசமைப்பின் 20ஆவது திருத்தச் சட்டத்துக்கு ஆதரவு வழங்கிய பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அ.அரவிந்குமாருக்கும் இராஜாங்க அமைச்சுப் பதவி நேற்று வழங்கப்பட்டுள்ளது.

ஜீவன் தொண்டமான் வகித்த தோட்ட வீடமைப்பு மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சே அரவிந்குமாரிடம் கையளிக்கப்பட்டுள்ளது.



## புதிய அமைச்சரவை பதவியேற்பு நிகழ்வைப் புறக்கணித்த மஹிந்த

### கடும் அதிருப்தியே காரணமாம்

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ முன்னிலையில் நேற்று புதிய அமைச்சரவை சத்தியப்பிரமாணம் செய்து கொண்ட நிகழ்வில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ கலந்து ☞2



## கொழும்பை இன்று வந்தடையும் ஜே.வி.பியினரின் பாத யாத்திரை

மக்களை வதைக்கின்ற அரசை விரட்டியடிப்போம் என்றுஅறைகூவல்விடுத்து, தேசிய மக்கள் சக்தியால் ஏற்பாடு செய்யப்பட்ட பாத யாத்திரை நேற்று இரண்டாவது நாளாகவும் முன்னெடுக்கப்பட்டது.

குறித்த பாத யாத்திரை நேற்றுமுன்தினம் முற்பகல் 9 மணிக்கு களுத்துறை, பேருவளையில் ஆரம்பமானது.

ஜே.வி.பி. – தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க உட்பட தேசிய மக்கள் சக்தியின் செயற் ☞2

## ஸ்ரீ. சுதந்திரக் கட்சியின் சுரேன் ராகவனும் ‘பல்டி’

### கிடைத்தது கல்வி இராஜாங்க அமைச்சு



சுயாதீனமாகச் செயற்படப் போவதாக அறிவிப்பு விடுத்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மற்றுமொரு நாடாளுமன்ற உறுப்பினரும் கோட்டாபய அரசுக்கு நேசக்கரம்நீட்டி இராஜாங்க அமைச்சுப் பதவியைப் பெற்றுக் கொண்டுள்ளார். ☞2

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அடிக்கடி இடம்பெறுகின்றன.

நேற்றுக் கட்சித் தலைவர்களின் கூட்டம் ஒன்றைக் கூட்டினார் சபாநாயகர். இப்போது நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல், பொருளாதார நெருக்கடிகள் குறித்து ஆராய்வதற்கான பூர்வாங்கக் கலந்துரையாடல் இது.

நாடாளுமன்றத்தில் உத்தியோக பூர்வமாக அங்கம் வகிக்கும் கட்சிகளின் எண்ணிக்கையை விரல் விட்டு எண்ணிவிடலாம். ஆனால் நேற்று மாலை சபாநாயகர் கூட்டிய கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் இரண்டரை டசின் தலைவர்கள் இருந்தார்கள். அவ்வளவு கட்சிகள் நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கின்றனவா என்பது ஆண்டவனுக்குத்தான் வெளிச்சம்.

கூட்டம் தொடங்கியதும் சபாநாயகர் உரையாற்றினார். இன்றைய நெருக்கடிக்கு நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை ஒழித்து, நாடாளுமன்றத்துக்குப் பதிலளிக்கக் கூடிய ஜனாதிபதி முறையை ஏற்படுத்துவதே ஒரே தீர்வு என்ற சாரப்பட யோசனை ஒன்றைத் தமது உரையில் பிரேரித்தார் சபாநாயகர்.

ஆனால் அண்மைக் காலம் வரை அரசுக்குள் இருந்துவிட்டு, அண்மையில் கிளர்ந்தெழுந்த தரப்புக்களும் பிறரும் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை ஒழிப்பதாயின், அதற்கு அரசமைப்பை முழுமையாக மாற்ற வேண்டும், அதற்குக் காலம் பிடிக்கும், அதைக் காலவோட்டத்தில் பின்னர் பார்க்கலாம் என்று கூறி, இப்போது உடனடியாக நடைமுறைக்குக் கொண்டு வரக்கூடியதாக 20 ஆவது திருத்தத்தை நீக்குதல் போன்ற சில திட்டங்களை குறிப்பிட்டுப் பிரேரித்தனர்.

கூட்டம் நடந்து கொண்டிருக்கும் போது சற்று தாமதமாக வந்த சுமந்திரன் எம்.பி., கூட்டத்தின் பின்வரிசையில் சத்தம் சந்தடியின்றி அமர்ந்தபடி நடப்பவற்றை அவதானித்துக்கொண்டிருந்தார்.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறையை நீக்க வேண்டும் என்று கருத்து கூறிய ரணில் விக்கிரமசிங்க, அது தொடர்பான விவாதம் காரசாரமாக நடந்து கொண்டிருந்தபோதுதான் பின்வரிசையில் சுமந்திரன் வந்து அமர்ந்திருக்கின்றமையைக் கண்டார். உடனே எழுந்தார். “எல்லோரும் கருத்துச் சொல்லிவிட்டீர்கள். இதோ ‘எதிர்க்கட்சிகளின் சட்டமா அதிபர்’ அமர்ந்திருக்கின்றார். அவரது கருத்தையும் செவிமடுப்போம்” – என்று சுமந்திரனைச் சுட்டிக்காட்டினார்.

அடுத்து சுமந்திரன் எழுந்து ஒரு குட்டி லெக்ஸரே அடித்தார். எல்லோரும் சத்தமின்றிச் செவிமடுத்தனர்.

“பிறகு மாற்றுவோம், பிறகு மாற்றுவோம் என்று கூறித்தான் 45 வருடங்களாக இந்த ஜனாதிபதி ஆட்சி முறையோடு இழுபடுகின்றோம். ஒன்றும் – ஒரு போதும் – நடக்கவில்லை. இதைச் செய்வதற்கு சர்வஜன வாக்கெடுப்பு மூலம் மக்கள் அங்கீகாரம் பெறுவது அவசியம். அதற்கான காலம் இப்போதுதான் சரியாகக் கனிந்து வந்திருக்கின்றது. இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி நாங்கள் மக்கள் அனுமதியைப் பெற்று விட வேண்டும். நீங்கள் கூறிய மற்றைய விடயங்களைச் செய்வதை விட இதற்காக அரசமைப்பை மாற்றுவதற்கு ஒரு ஆறு மாத காலம் கூட பிடிக்கலாம். ஆனால் அதை மக்களுக்கு நாங்கள் விளங்கப்படுத்தினால் அவர்கள் இந்தத் தாமதத்தை ஏற்றுக்கொண்டு பொறுத்துக் கொள்வார். நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை மாற்றுவது ஒன்றே இன்றைய பிரச்சினையைச் சுமூகமாகத் தீர்க்கும். அதற்கான கால,நேர,சூழ்நிலை, சந்தர்ப்பங்கள் பொருந்தி வந்துள்ளன. அதனை நாம் தவற விட்டுவிடக்கூடாது” – என்று சுமந்திரன் கூறிய கருத்தை வாசுதேவ நாணயக்கார, டிலான் பெரேரா போன்றோர் உடனே வரவேற்றனர்.

சபாநாயகரும் அதனை உறுதிப்படுத்தி தொகுப்புரை நிகழ்த்தினார். அடுத்து வரும் நாள்களில் கட்சித் தலைவர்கள் மீண்டும் ஒன்றுகூடி இது குறித்து இறுதித் தீர்மானம் எடுப்பது என்று நேற்றைய கூட்ட முடிவில் சபாநாயகர் அறிவித்தார்.

சுமந்திரனை ‘எதிர்க்கட்சிகளின் சட்டமா அதிபர்’ என்று ரணில் விக்கிரமசிங்க நேற்றைய கூட்டத்தில் அறிவித்தமைதான் அந்த கூட்டத்தின் ஹைலைட்.

ஆனால் எனக்கு கிடைத்த தகவல்கள் வேறு மாதிரி இருந்தன. ஆளும் தரப்புக் கூட தனது உத்தியோகபூர்வ சட்டமா அதிபரை விட சட்ட விவகார, வியாக்கியானங்களில் சுமந்திரனை அதிகம் நம்புவதாகத் தெரிகின்றது.

இப்போதைய நெருக்கடிக்குத் தீர்வாக, மக்களுக்குப் பொறுப்புக் கூறக் கூடிய ஆட்சிமுறை ஒன்றுக்கு வழி செய்யும் விதத்தில் மக்களின் எதிர்பார்ப்பை நிறைவு செய்யும் ஓர் அரசமைப்பு மாற்றத்திற்கான யோசனை திட்டமொன்றை தாமே அமைச்சரவையில் முன்மொழிவார் என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நேற்று அறிவித்து இருக்கிறார் அல்லவா?

அத்தகைய யோசனைத் திட்டம் ஒன்றைத் தயாரிப்பதற்கு முன்னர் அது குறித்து சுமந்திரனோடு விரிவாக ஆலோசியுங்கள் என்று தமது அதிகாரிகளுக்கு உத்தரவு விடுத்துள்ள பிரதமர், திட்ட வரைவு தயாராகும்போது தானும் சுமந்திரனுடன் பேசுவார் என்று கருத்துக் கூறினார் எனவும் மிகவும் நம்பகரமாக அறிந்தேன். உரிய ஆலோசனைகளை பெறுவதற்கான இணக்கத்தை சுமந்திரனோடு தொடர்பு கொண்டு சம்பந்தப்பட்ட தரப்புகள் பெற்றிருக்கின்றன என்றும் அறிந்தேன்.

விடயம் மலிந்தால் சந்தைக்கு – சந்திக்கு – வரும்தானே. அப்போது பார்க்கலாம்.

சுமந்திரனின் அரசியல் நிலைப்பாடுகள், செயல்பாடுகள், அணுகுமுறைகள் எப்படி இருந்தாலும், சட்ட அறிஞர் என்ற நிலையில் ஏ.ஜே.வில்சன், நீலன் திருச்செல்வம் போன்றோர் வரிசையில் மதிக்கப்படுபவராக அவர் இருக்கின்றார்.

நீலன் திருச்செல்வத்தைத் ‘துரோகி’ யாக்கியமை போன்று, சுமந்திரனையும் துரோகியாக்க நம்மவர்கள் – அவர் தரப்பைச் சேர்ந்தவர்கள் – பலர் துடியாய்த் துடிப்பதுதான் இதில் துன்பியல் போக்காகும்.

– மின்னல் –

---

## அரசமைப்பில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தேர்ந்தெடுக்கப்பட்ட ஜனாதிபதி என்ற முறையில், அரசமைப்பு மற்றும் ஜனநாயகத்தின் கட்டமைப்புக்குள் நான் எப்போதும் செயற்படுகின்றேன்.

நாட்டின் சட்டமியற்றும் அதிகாரம் நாடாளுமன்றத்துக்கு உள்ளது. எனவே, அரசமைப்பில் ஏற்படுத்த வேண்டிய மாற்றங்கள் குறித்து பல்வேறு அரசியல் கட்சிகள் தெரிவித்த கருத்துக்களை நாடாளுமன்றத்தில் கலந்துரையாடி தேவையான மாற்றங்களை நிறைவேற்ற வாய்ப்பு உள்ளது. அது தொடர்பில் அவசியமான ஒத்துழைப்பை எந்த நேரத்திலும் நாடாளுமன்றத்துக்கு வழங்குவதற்கு நான் தயாராக உள்ளேன்.

அதற்கிணங்க, நாட்டின் அதியுயர் அரசமைப்புக்கு மதிப்பளித்து, எதிர்காலத்தில் தேவையான மாற்றங்களைச் செய்து, இந்த நெருக்கடியிலிருந்து நாட்டை விடுவிப்பதாக நான் உறுதியளிக்கின்றேன் – என்றார்.

---

## அரசைத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

புதிய அமைச்சரவை பதவிப்பிரமாணம் செய்து கொண்டதன் பின்னர் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சமூகத்தின் மிகவும் சுறுசுறுப்பான பகுதியினரான இளைஞர்கள் தங்கள் அழுத்தத்தை அவர்களுக்கே உரிய வழியில் வெளியிடுவதில் எந்தத் தவறும் இருப்பதாக நான் நினைக்கவில்லை.

நாட்டின் எதிர்காலத்தைப் பொறுப்பேற்க உள்ள இளைஞர்கள் தங்கள் கருத்துக்களைத் தெரிவிக்கவும், ஆர்ப்பாட்டங்களை ஏற்பாடு செய்யவும், போராட்டங்களை நடத்தவும் இன்று முழுச் சுதந்திரம் பெற்றுள்ளனர்.

அவர்கள் தமது போராட்டங்களை ஆக்கபூர்வமாக முன்னெடுத்துச் செல்லும்போது, ஒழுக்கத்துடன் கடமையாற்றும் பொலிஸார், முப்படையினர் மற்றும் பாதுகாப்புப் பிரிவு அதிகாரிகளைக் குறிப்பாக நான் பாராட்டுகின்றேன்.

உங்களுக்குத் தெரியும், கடந்த இரண்டரை ஆண்டுகளில், நான் போராட்டங்களுக்கு, ஊர்வலங்களுக்கு, ஆர்ப்பாட்டங்களுக்கு இடமளித்து இருந்தேன். சுதந்திரம் வழங்கியுள்ளேன். என் அலுவலகத்துக்கு அருகில் வந்த போராட்டக்காரர்களைக் கலைக்கக்கூட நான் நடவடிக்கை எடுக்கவில்லை.

இந்த எதிர்ப்பாளர்களில் பெரும்பான்மையானவர்கள் தங்கள் நாட்டை உண்மையாக நேசிக்கும் இளைஞர்கள் என்று நான் நம்புகின்றேன். அவர்கள் நாட்டுக்காக முன்வருவதை எதிர்காலத்துக்கான சாதகமான அடையாளமாகவும் பார்க்கின்றேன்.

இனம், மதம், அரசியல் வேறுபாடின்றி நாட்டை நேசிக்கும் பெரும்பாலான மக்கள் தற்போதைய ஆட்சியின் தவறுகளைத் திருத்தி நாட்டைக் கட்டியெழுப்பவே விரும்புகின்றார்கள், நாட்டைத் தோல்வி அடையச் செய்வதற்கு அல்ல என்று நான் நம்புகின்றேன். எனவே, உங்கள் ஜனநாயகப் போராட்டங்களை வன்முறைப் பாதையில் திசை திருப்ப சந்தர்ப்பவாதிகளுக்கு இடமளிக்க வேண்டாம் என்று இந்த இளைஞர்களிடம் கேட்டுக் கொள்கின்றேன் – என்றார்.

---

## ஸ்ரீ.சுதந்திரக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தேசியப்பட்டியல் ஊடாக நாடாளுமன்றத்துக்குத் தெரிவான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினரான கலாநிதி சுரேன் ராகவனே இவ்வாறு கல்வி சேவை மற்றும் மறுசீரமைப்பு இராஜாங்க அமைச்சை நேற்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ முன்னிலையில் பெற்றுக்கொண்டுள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் பிரச்சார செயலாளராகச் செயற்பட்ட சாந்த பண்டாரவும், அரசுக்கு ஆதரவு வழங்கி விவசாயத்துறை இராஜாங்க அமைச்சுப் பதவியைப் பெற்றுக்கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

அந்தவகையில் நாடாளுமன்றத்தில் தற்போது சுதந்திரக் கட்சி பக்கம் 12 எம்.பிக்களே உள்ளனர்.

---

## தாம் விட்ட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நிதியத்துடன் ஒரு திட்டத்துக்கு இதற்கு முன்னர் சென்றிருக்க வேண்டும் என்று நான் நம்புகின்றேன். அதேபோன்று, இரசாயன உரங்களை விவசாயிகளுக்கு வழங்காமல் இருந்தது தவறு என நினைக்கின்றேன். அவற்றை மீண்டும் வழங்க நடவடிக்கை எடுத்துள்ளோம்.

இந்தப் பொருளாதார நெருக்கடியால் ஏற்பட்ட பல சிக்கல்களால் இன்று மக்கள் மிகுந்த பாதிப்புக்குள்ளாகி இருக்கின்றனர். அதற்காக நான் மிகவும் வருந்துகின்றேன்.

வாழ்க்கைச் செலவைச் சமாளிக்க முடியாத மக்கள் அத்தியாவசியப் பொருள்களைப் பெற வரிசையில் நின்று நேரத்தைச் செலவழிப்பதால் ஏற்படும் வேதனையும், அசௌகரியமும், கோபமும் மிகவும் நியாயமானவை – என்றார்.

## அன்றும் இன்றும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

உறுதியாக உள்ளேன். அதன்படி, தற்போதைய நெருக்கடியை மக்கள் எதிர்பார்க்கும் மாற்றத்தை வழங்குவதற்கு ஒரு வாய்ப்பாக எடுத்துக்கொள்கின்றேன்.

இந்த நாட்டு மக்களின் பணத்தை நான் திருடியவனல்லன். அன்றும் இன்றும் என் கைகள் சுத்தமாகவே உள்ளன. நான் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டமை பலரது கோரிக்கைகளுக்காகவே அன்றி அதிகார தேவைக்காக அல்ல. எனது வாழ்நாளில் முப்படையில் அதிகாரியாக 20 ஆண்டுகள் இந்த நாட்டுக்குச் சேவை செய்துள்ளேன். நான் வெற்றிகரமாக சேவை செய்துள்ளேன்.

அத்துடன், பாதுகாப்புச் செயலாளராக நான் இந்த நாட்டுக்கு வெற்றிகரமாக சேவையாற்றியுள்ளேன். நகர அபிவிருத்தி அமைச்சின் செயலாளராகவும் அர்ப்பணிப்புடன் கடமையாற்றியுள்ளேன் – என்றார்.

---

## புதிய அமைச்சரவை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கொள்ளவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதிய அமைச்சரவை பதவிகள் சம்பந்தமான தனது அதிருப்தியை வெளியிடும் வகையில் பிரதமர் அதில் கலந்து கொள்ளவில்லை என அரசியல் தரப்புத் தகவல்கள் கூறுகின்றன.

குறிப்பாக சிரேஷ்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலருக்கு அமைச்சு பதவிகள் கிடைக்காதமையே பிரதமரின் அதிருப்திக்குக் காரணம் எனக் கூறப்படுகின்றது.

இதன் காரணமாகப் பிரதமர், புதிய அமைச்சரவை பதவியேற்கும் நிகழ்வில் கலந்துகொள்ளவில்லை என அரசியல் வட்டாரத்தில் தகவல்கள் பரவி வருகின்றன.

இந்தநிலையில், புதிய அமைச்சரவை பதவிப் பிரமாணம் செய்து சிறிது நேரத்தில் அமைச்சரவை உறுப்பினர்களை அலரி மாளிகைக்குப் பிரதமர் அழைத்துள்ளார்.

இதன்போது அரசின் அடுத்த வேலைத்திட்டங்கள் தொடர்பாக விரிவாகப் பேசப்பட்டுள்ளன என்று தெரிய வருகின்றது.

---

## கொழும்பை இன்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பாட்டாளர்களும், பெருந்திரளான மக்களும் இந்தப் பாதயாத்திரையில் பங்கேற்றுள்ளனர்.

குறித்த பாத யாத்திரை இன்று கொழும்பை வந்தடையவுள்ளது.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
மின்னஞ்சல் -
kalaikkathiradvt@gmail.com
தொலைபேசி இலக்கம் -
076 443 8622




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக
30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து
வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with
Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable
in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

# பிரதமரின் திட்டம் என்ன?

விடயங்களைத் தள்ளிப் போடுவதன் மூலம் பிரச்சினைகளை ஆறப்போட்டு, இழுத்தடித்துச் சமாளிக்கும் ஒரு தந்திரோபாயம் வழமையாக அரசியலில் கையாளப்படுவது உண்டு.

அப்படியான ஓர் எத்தனைதான் அரசு – ராஜபக்ஷ தரப்பு – மக்களுடன் விளையாடப் பார்க்கின்றது. சந்திரனைக் காட்டி சிறு பிள்ளைக்கு நிலாச்சோறு ஊட்டும் உத்திதான் இது.

மக்களின் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்ற கூடிய அரசமைப்புத் திருத்தம் ஒன்றைப் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தாமே அமைச்சரவையில் முன்மொழிவாராம். அதுவரையில், முழுமையான மாற்றத்திற்காக இப்போது வீதிக்கு இறங்கிப் போராடி வரும் பொதுமக்கள் அடங்கி இருக்க வேண்டுமாம். இதுவே ராஜபக்ஷக்களின் எதிர்பார்ப்பாக இருக்கின்றது.

நேற்று மாலை பிரதமர் அலுவலகம் வெளியிட்ட செய்திக் குறிப்பு அப்படி ஒரு கருத்தைத்தான் தந்து நிற்கின்றது. பற்றி எரியும் நாட்டின் தற்போதைய நெருக்கடிகளுக்கு இத்தகைய வாக்குறுதிகள் தற்காலிகத் தீர்வைத் தன்னும் தரப் போவதில்லை என்பது நிச்சயம்.

இப்போதைய நெருக்கடிகளுக்குத் தீர்வாக என்ன யோசனைகளை முன்வைப்பது என்பது குறித்து நேற்று சபாநாயகர் கூட்டிய கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் கலந்தாலோசிக்கப்பட்டு இருக்கின்றது.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறையை நீக்குவதில் இருந்து பல்வேறு ஆலோசனைகள் அங்கு முன்வைக்கப்பட்டன. எனினும் ஒரு தீர்க்கமான முடிவு எட்டப்படவில்லை. இரண்டொரு நாள்களில் மீண்டும் கூடித் தீர்மானிப்பது என்று முடிவு செய்யப்பட்டது.

இப்போதைய அரசியல், பொருளாதார நெருக்கடிகளுக்குத் தீர்வு காண்பதற்கு ஏதோ வகையான அரசமைப்புத் திருத்தம் அல்லது மாற்றத்தை கொண்டு வருவது குறித்து கட்சித் தலைவர்களும் பேசுகின்றார்கள். பிரதமரும் பேசுகின்றார். ஜனாதிபதியும் கோடி காட்டுகின்றார்.

ஆனால் அந்தத் திருத்தம் அல்லது மாற்றம் யாது, அந்த மாற்றம் மூலம் என்ன பெறுபேறு கிட்டும் என்பவையெல்லாம் தெளிவற்ற – மறைபொருளாகவே – இருக்கின்றன.

இந்த அரசுக்கும், ஜனாதிபதிக்கும் எதிராக செம கோபத்தில் – சீற்றத்தில் இருக்கும் நாட்டு மக்களுக்கு விவரம் வெளிப்படுத்தப்படாத – உருப்படி இல்லாத – இந்தத் திட்டங்கள் திருப்தி அளிப்பனவாக இருக்கப் போவதில்லை.

தமது பொதிக்குள் – மடிக்குள் – தாம் வைத்திருக்கும் திட்டம் யாது என்பதை பிரதமர் தெளிவுபடுத்தும் வரை, அதை நம்பி தங்கள் போராட்டத்தைத் தற்போது கொதித்தெழுந்திருக்கும் மக்கள் கைவிட மாட்டார்கள் என்பது உறுதி.

மக்கள் போராட்டத்தைச் சட்டை செய்யாமல் – அசண்டையீனமாக – தன் பாட்டில் அமைச்சரவை நியமனம், அரசின் மற்றைய நடவடிக்கைகள் என்று செயற்பட விழையும் ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் அரசுக்கும் எதிராக மக்களின் கோபம் இன்னும் தீவிரம் பெறும் என்பது வெள்ளிடைமலை.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தமது நேற்றைய அறிக்கையில் ஒரு விடயத்தை தெரிவித்திருக்கின்றார். "மக்களுக்கு பொறுப்புக் கூறும் அரசாங்கமொன்றை உருவாக்குவதற்கு பல்வேறு தரப்பினரும் முன்வைத்த கோரிக்கைகளை கவனத்தில் கொண்டு, அது தொடர்பில் பிரதமர் கவனம் செலுத்தி உள்ளார்" – என்று பிரதமரின் ஊடகப் பிரிவின் அறிக்கை கூறுகின்றது.

அதன்படி பார்த்தால் மக்களுக்குப் பொறுப்புக் கூறும் ஓர் அரசாங்கம் இப்போது இல்லை. அல்லது அதற்கான முறைமை இல்லை. இனிதான் அதை உருவாக்கும் வழிமுறைகள் குறித்துக் கலந்துபேசி முடிவெடுக்கப் போகின்றோம் என்று பிரதமரே ஒப்புக்கொள்வதாக உள்ளது.

அதுதானே உண்மையும் கூட...!

# பொதுமக்களுக்கும் பொலிஸாருக்குமான இடைவெளியை வடக்கில் மாற்றவேண்டும்!

## மூத்த பிரதிப் பொலிஸ் மா அதிபர் திடசங்கற்பம்



வடக்கில் பொலிஸாருக்கும் பொதுமக்களுக்கும் இடையிலான இடைவெளியை மாற்றியமைக்க வேண்டும் என வடக்கு மாகாணத்துக்கு புதிதாக நியமிக்கப்பட்ட மூத்த பிரதிப் பொலிஸ் மா அதிபர் பிரியந்த விஜயசூர்ய தெரிவித்தார்.

காங்கேசன்துறையில் உள்ள தனது உத்தியோகபூர்வ அலுவலகத்தில் நேற்று (திங்கட்கிழமை) காலை கடமைகளைப் பொறுப்பேற்ற பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது மேலும் தெரிவித்த அவர் –

வடக்கு பகுதியில் உள்ள மக்களுக்குத் தேவையான விடயங்களைப் பொலிஸார் என்ற ரீதியில் எங்களால் செய்யக்கூடிய அனைத்து விடயங்களையும் செயற்படுத்த முயற்சி செய்யவுள்ளேன்.

அதற்குரிய சந்தர்ப்பம் எனக்கு கிடைத்துள்ளமையையிட்டு நான் மகிழ்ச்சி அடைகின்றேன்.

அத்துடன் வடக்கில் பொலிஸாருக்கும் பொதுமக்களுக்கும் இடையில் உள்ள இடைவெளி நிலையை மாற்றி அமைக்க வேண்டும். அந்த இடைவெளி நிலையை இல்லாமல் செய்வதற்குரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும். – என்றார்.

# நடுவுநிலைமை எனக் கூறுவது கள்ளர் கூட்டத்தை ஆதரிப்பதே!

## வேலுகுமார் சாட்டை



மக்கள் பக்கமா? கள்ளர்கள் பக்கமா? என்பதே நம்பிக்கையில்லாப் பிரேரணையை ஆதரிப்பதும் எதிர்ப்பதும் என்றும் நடுநிலைமை என்பதும் கள்ளர் கூட்டத்தை ஆதரிப்பதே என கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வேலுகுமார் தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர் –

நாடு முழுவதும் நாளுக்கு நாள் தன்னெழுச்சிப் போராட்டம் வீரியம் பெற்று வருகின்றது.

மக்களின், 'கோட்டா போ' என்ற கோஷம் வலுப்பெறுகிறது. 'ராஜபக்ஷக்களை விரட்டி அடிப்போம், கொள்ளையடித்த பணத்தை திரும்பப் பெறுவோம்' என்று பல மட்டங்களிலும் போராட்டங்கள் வெடித்திருக்கின்றன.

ஆனால், அரசாங்கம் தனது வழமையான அசமந்தப் போக்கையும் இழுத்தடிப்பையும் செய்து வருகின்றது. வீதிகளிலே மக்கள் அரசாங்கத்தை வீட்டுக்கனுப்பப் போராடுகின்றபோது, அதற்கு மதிப்பளித்து, அரசியல் அமைப்பிற்கமைய நாடாளுமன்றத்தில் நாம் அரசை வீட்டுக்கு அனுப்பும் வேலையை செய்ய வேண்டி இருக்கின்றது. அதற்காக நம்பிக்கையில்லாப் பிரேரணை முன்வைக்கப்பட்டிருக்கின்றது.

மக்கள் பக்கமா? கள்ளர்கள் பக்கமா? என்பதே நம்பிக்கையில்லா பிரேரணையை ஆதரிப்பதும் எதிர்ப்பதும் ஆகும். இதில் நடுவுநிலைமை எனக் கூறி தலைமறைவாக முடியாது. நடுவுநிலைமை என்பதும் கள்ளர் கூட்டத்தை ஆதரிப்பதே ஆகும்.

நாடாளுமன்றத்தில் உள்ள ஒவ்வொரு மக்கள் பிரதிநிதியும் இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையை ஆதரிக்கக் கடமைப்பட்டுள்ளனர். இதனை எதிர்ப்பது என்பது நாட்டைப் புறம்தள்ளி, மக்களை புறம்தள்ளி, இன்று வீதியில் இறங்கிப் போராடும் இளைஞர் யுவதிகளின் கருத்தை, கோஷத்தை ஏளனப்படுத்தி, தமது சொந்த நலனுக்காகச் செயற்படுவதாகும்' என அவர் மேலும் தெரிவித்தார்.

# கப்ராலின் வெளிநாட்டு தடை மேலும் நீடிக்கப்பட்டுள்ளது!



மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அஜித் நிவாட் கப்ராலுக்கு விதிக்கப்பட்ட பயணத் தடை மே 2 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

அஜித் நிவாட் கப்ராலுக்கு நாட்டை விட்டு வெளியேறுவதற்கு நேற்று வரை தடை விதிக்கப்பட்ட நிலையில் அதனை மேலும் நீடித்து கொழும்பு நீதிவான் நீதிமன்றம் நேற்று (திங்கட்கிழமை) அறிவித்தது.

மேலும் மே இரண்டாம் திகதி நீதிமன்றில் முன்னிலையாகுமாறும் கொழும்பு நீதிவான் நீதிமன்றம் அழைப்பாணை விடுத்துள்ளது.

மத்திய வங்கியின் ஆளுநராக 2006 ஜூலை 01 ஆம் திகதி முதல் 2015 ஜனவரி மாதம் 08 ஆம் திகதி வரையான காலப்பகுதியில், அமைச்சரவையின் அல்லது நிதிச் சபையின் அனுமதியின்றி இமாத் ஷா சுபைரிக்கு, 65 லட்சம் டொலர்களை செலுத்தியதன் மூலம், கப்ரால் குற்றத்தை புரிந்துள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், அவர் ஆளுநராக இருந்த போது, 2022 ஜனவரி 18 ஆம் திகதி செலுத்த வேண்டிய முறிப் பத்திரங்கள் மூலம் இலங்கை அரசாங்கத்துக்கு 50 கோடி அமெரிக்க டொலர் நஷ்டத்தை ஏற்படுத்தினார் என மற்றுமொரு குற்றச்சாட்டும் முன்வைக்கப்பட்டுள்ளது.

மேலும், ஆளுநராக இருந்த காலத்தில், மத்திய வங்கிக்குள் பதவிகளுக்கு தனது நெருங்கிய உறவினர்களை நியமித்தமையால் இரகசியத் தகவல்களை வெளியிட்ட இடமளித்து திறைசேரி உண்டியல்கள் மற்றும் முறிகள் மூலம் இலங்கை அரசாங்கம் 1, 004 கோடி பில்லியன் ரூபா நஷ்டமடைந்துள்ளது என முறைப்பாட்டில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயங்கள் தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்ளப்படும் நிலையில், அஜித் நிவாட் கப்ரால் நாட்டை விட்டு தப்பிச் செல்வதற்கான சாத்தியக்கூறுகள் இருக்கின்றமையால், அவரை நாட்டை விட்டு வெளியேறுவதைத் தடுக்கும் உத்தரவைப் பிறப்பிக்குமாறு கோரி மனுத் தாக்கல் செய்யப்பட்டது.

இதனைப் பரிசீலித்த நீதிவான், மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அஜித் நிவாட் கப்ராலுக்கு வெளிநாடு செல்லத் தடை விதிக்கும் உத்தரவைப் பிறப்பித்திருந்தார்.

# ஜனாதிபதி முன்னிலையில் 17 அமைச்சர்கள் பதவியேற்பு





- கோட்டா, மஹிந்த, பீரிஸ், சப்றியின் பதவிகளில் மாற்றம் இல்லை
- பஸில், சமல், நாமலுக்கு எந்தப் பொறுப்பும் இல்லை
- ஜோன்சன் உள்ளிட்ட சிரேஷ்ட உறுப்பினர்கள் பலர் 'அவுட்'
- '20'ஐ ஆதரித்த நஸீருக்குச் சுற்றுச்சூழல்
- பெண்கள் எவருக்கும் அமைச்சு இல்லை

புதிய அமைச்சர்கள் 17 பேர் நேற்றுமுற்பகல் கொழும்பு, கோட்டை ஜனாதிபதி மாளிகையில் ஜனாதிபதி முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்து கொண்டனர். (விவரம் 11ஆம் பக்கத்தில்...)

## அரசமைப்பை திருத்தம் செய்வதற்கான முன்மொழிவை பிரதமரே முன்வைப்பார்

மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றக் கூடிய விதத்தில் அரசமைப்பை திருத்தம் செய்வதற்கான முன்மொழிவை பிரதமரே முன்வைப்பார் என நேற்று புதிய அமைச்சரவை பதவியேற்றதன் பின்னர் பிரதமரின் ஊடக பிரிவு விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருந்தது. அதன் விவரம் வர்மாறு:

மக்களுக்கு பொறுப்புக்கூறும் அரசாங்கமொன்றை உருவாக்குவதற்கு பல்வேறு தரப்பினரும் முன்வைத்த கோரிக்கைகளை கவனத்திற் கொண்டு, அது தொடர்பில் பிரதமர் கவனம் செலுத்தியுள்ளார்.

நிறைவேற்று அதிகாரம் மற்றும் சட்டவாக்க சபை போன்றே நீதித்துறையின் சாத்தியமான கருத்துக்களை உள்ளடக்கிய அரசமைப்பை திருத்துவதற்கான முன்மொழிவொன்றை அமைச்சரவையில் சமர்ப்பிப்பதற்கு கௌரவ பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் எதிர்பார்த்துள்ளார்.

அத்திருத்தப்பட்ட அரசமைப்பினூடாக மக்களின் எதிர்பார்ப்புகளை நிறை வேற்ற முடியும் என்பது கௌரவ பிரதமரின் எதிர்பார்ப்பாகும்.-என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மாற்றப்பட வேண்டியவர் பிரதமரே; அமைச்சரவையை ஏற்க முடியாது!

### - சுதந்திரக் கட்சி கடும் சீற்றம்



பிரதமர் பதவியில் மாற்றமின்றி இடம்பெற்ற அமைச்சரவை மறுசீரமைப்பு ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல.

- இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான சிறிலங்கா சுதந்திரக் கட்சி தெரிவித்துள்ளது.

மக்களின் கோரிக்கைக்கு செவிமடுக்காமல், அமைச்சுப் பதவியை ஏற்றவர்களுக்கு மக்கள் பாடம் புகட்டுவார்கள் எனவும் அக்கட்சி சுட்டிக் காட்டியுள்ளது.

17 பேருடன் புதிய அமைச்சரவை நேற்று பதவி யேற்றுள்ளது.

இவ்வாறானதொரு பின்புலத்தி லேயே புதிய அமைச்சரவை நியமனத்தை சுதந்திரக் கட்சி எதிர்த்துள்ளது.

புதிய பிரதமர் தலைமையில் அனைத்துக் கட்சிகளையும் உள்ளடக்கிய இடைக்கால அரசு மலரவேண்டும் எனவும் அக்கட்சி வலியுறுத்தியுள்ளது.

## அன்னை பூபதியை நினைவு கூர்வதற்கு 11 பேருக்கு நீதிமன்றம் தடை உத்தரவு

கடந்த 1988 ஏப்ரல 19 மட்டக்களப்பு மாமாங்கேஸ்வர ஆலயத்தில் உண்ணா விரதம் இருந்து உயிர்நீத்த அன்னை பூபதியின் 34ஆம் ஆண்டு நினைவு தினத்தை அனுஷ்டிக்க வேண்டாம் என காத்தான்குடி பொலிஸாரால் மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றத்தின் மூலம் தடை உத்தரவு விதிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான கோவிந்தன் கருணாகரம், இரா. சாணாக்கியன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான பா.அரியநேத்திரன், சீ.யோகேஸ்வரன், ஞா.ஸ்ரீநேசன், மாநகர முதல்வர் தி.சரவண பவான், முன்னாள் கிழக்கு மாகாணசபை உறுப்பினர் இ.பிரசன்னா, இலங்கைத் தமிழரசுக் கட்சி வாலிபர் அணி தலைவர் கி.சேயோன், மட்டக்களப்பு மாவட்ட வாலி பர் அணி தலைவர் லோ.திபாகரன், சிவில் அமைப்பு தலைவர் ச.சிவயோக நாதன், வாழைச்சேனை குணசேகரம் ஆகிய 11 பேருக்கு எதிராகத் தடை உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

அன்னை பூபதியின் உடலம் நல்லடக்கம் செய்யப்பட்ட நாவலடி கடற்கரை ஓரம் அமைந்துள்ள கல்லறையில் அவரது நினைவு நாளன்று வழமையாக அவர் நினைவு கூரப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

## பஸிலின் எம்.பி. பதவிக்கும் ஆப்பு?

### 19ஐ மீண்டும் செயற்படுத்துவதற்கு கோட்டா பச்சைக்கொடி காட்டியமையால்



ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் நிறுவுநர் பஸில் ராஜபக்ஷவின் நாடாளுமன்ற உறுப்புரிமையும் பறிபோகும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

ஏற்கனவே அவரிட மிருந்து நிதி அமைச்சுப் பதவி பறிக்கப்பட்டுள்ள நிலையில், தற்போது எம்.பி. பதவியையும் இழக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

அரசமைப்பின் 20 ஆவது திருத்தச் சட்டத்தை நீக்கி, 19 ஐ மீண்டும் செயற்படுத்துவதற்கு ஜனாதிபதி பச்சைக்கொடி காட்டியுள்ளார் எனத் தகவல் வெளியாகியுள்ளது. 19 ஆவது திருத்தச் சட்டத்தின் பிரகாரம் இரட்டைக் குடியுரிமை கொண்டவர்கள், நாடாளுமன்ற உறுப்பினராகச் செயற்படத் தடைவிதிக்கப்பட்டுள்ளது.

எனவே, 20ஆவது திருத்தம் நீக்கப்பட்டால் பஸிலுக்கு எம்.பி. பதவியை இழக்க நேரிடும்.

இதற்கிடையில் -

அரசமைப்பின் 19ஆவது திருத்தத்தை மீண்டும் கொண்டு வருவ தற்கான சட்டத்திருத்தத்தை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தாமே நாடாளுமன்றத்தில் விரைவில் சமர்ப்பிப்பார் என்பதை வெளிப்படுத்தும் அறிக்கை ஒன்றை நேற்று மாலையில் வெளியிட இருந்தார் செய்திகள் தெரிவித்தன.

## கோட்டாபய அரசுக்கு எதிராக புதனன்று நாடு தழுவிய தொழிற்சங்கப் போராட்டம்

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோர் தொடர்ந்தும் பதவியில் இருப்பதற்கு முயற்சிகளை மேற்கொண்டு வருகின்ற நிலையில் அரச ஊழியர்கள் தமது கடுமையான எதிர்ப்பை எதிர்வரும் 20ஆம் திகதி புதன்கிழமை வெளிப்படுத்துவதற்குத் தீர்மானித்துள்ளனர்.

ராஜபக்ஷ குடும்பத்தினர் அனைவரும் பதவி விலக வேண்டும் என்று அரசுக்கு எதிரான போராட்டக்காரர்கள் வலியுறுத்தி வருகின்ற நிலையில் இன்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோரைப் பிரதானமாகக் கொண்டு புதிய அமைச்சரவை நியமிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து எதிர்வரும் புதன்கிழமை நாடு தழுவிய தொழிற்சங்கப் போராட்டம் இடம்பெறவுள்ளது என்று அரச ஊழியர்கள் அறிவித்துள்ளனர்.

## 11 வாகனங்கள் மோதி விபத்து!

### - மூவர் வைத்தியசாலையில்

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் 11 வாகனங்கள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்து ஏற்பட்டுள்ளது.

கௌனிகம-தொடங்கொடை ஆகிய பகுதிகளுக்கிடையில் நேற்றுமுன்தினம் இவ்விபத்து இடம் பெற்றுள்ளது.

இந்த வாகன விபத்தில் 3 பேர் காயமடைந்த நிலையில், நாகொடைவைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

காலைக்கதிர் Kalaikkathir

# புதிய அமைச்சரவையை மக்கள் ஏற்கமாட்டார்கள்!

## தயாசிறி தெரிவிப்பு



புதிய அமைச்சரவையை நாட்டு மக்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். மக்களால் புறக்கணிக்கப்பட்ட தரப்பினரை உள்ளடக்கிய அமைச்சரவை உருவாக்கப்படவுள்ளது. அரசாங்கத்துக்கு எதிராகக் கொண்டு வரவுள்ளதாகக் குறிப்பிடப்படும் நம்பிக்கையில்லாப் பிரேரணை தெளிவற்றதாக உள்ளது.

அனைத்து அரசியல் செயற்பாடுகள் தொடர்பாகவும் அவதானம் செலுத்தி வருகிறோம் என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச்செயலாளர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

புதிய அமைச்சரவை நியமனம் தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் –

அரசாங்கத்துக்கு எதிராகவும், முழு அரசியல் கட்டமைப்பிற்கும் எதிராக காலிமுகத்திடலில் போராட்டத்தில் ஈடுபடும் மக்களின் கருத்துக்கும், அபிலாஷைகளுக்கும் 225 நாடாளுமன்ற உறுப்பினர்களும் மதிப்பளிக்க வேண்டும். அரசாங்கத்துக்கு எதிரான மக்களின் வெறுப்பு நாளுக்கு நாள் அதிகரிக்கிறதே தவிர குறைவடையவில்லை.

மக்களால் புறக்கணிக்கப்பட்ட தரப்பினரை உள்ளடக்கிய வகையில் புதிய அமைச்சரவை நியமிக்கப்படவுள்ளது. எவ்வித மாற்றங்களும் இல்லாமல் உள்ளதை உள்ளவாறு கொண்டு வரும் புதிய அமைச்சரவையை நாட்டு மக்கள் ஒருபோதும் ஏற்க மாட்டார்கள். இந்தச் செயற்பாடு மக்களின் போராட்டத்தைத் தீவிரப்படுத்துமே தவிர குறைவடையச் செய்யாது.

அரசாங்கத்துக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தியினர் கொண்டு வரவுள்ளதாகக் குறிப்பிடப்படும் நம்பிக்கையில்லா பிரேரணை தெளிவற்றதாகக் காணப்படுகிறது. நம்பிக்கையில்லாப்பிரேரணையைநிறைவேற்ற 113 பெரும்பான்மை பலத்தை உறுதிப்படுத்த வேண்டும்.

நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பாக எதிர்க்கட்சியினர் நாடாளுமன்றில் சுயாதீனமாக செயற்படும் தரப்பினரிடம் எவ்வித பேச்சுகளையும் முன்னெடுக்கவில்லை.

நம்பிக்கையில்லாப் பிரேரணையில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயம் தொடர்பாக அரசியல் கட்சிகள் மத்தியில் விரிவுபடுத்தப்பட்ட பேச்சை முன்னெடுப்பது அவசியமாகும்.

நாடாளுமன்றில் சுயாதீனமாகச் செயற்படும் தரப்பினர் இனி நாடாளுமன்றில் ஒரு குழுவாகச் செயற்பட தீர்மானித்துள்ளோம். அரசமைப்பின் 20 ஆவது திருத்தத்தை நீக்கி 21 ஆவது திருத்தத்தைக் கொண்டு வருவது எமது பிரதான எதிர்பார்ப்பாக உள்ளது. 21 ஆவது திருத்தத் துக்கு எதிராக வாக்களிக்கும் மக்கள் பிரதிநிதிகள் தங்களின் சொந்த இடங்களுக்குச் செல்வது தொடர்பாக மீள்பரிசீலனை செய்ய வேண்டும். – என்றார்.

# சிங்களவர் போராட்டத்தில் தமிழ் இளைஞர்கள் பங்கேற்பதால் எமக்கென்ன இலாபம் கிடைக்கும்?

## கருணாகரம் எம்.பி. இப்படிக் கேள்வி

சிங்கள இளைஞர்கள், யுவதிகள் தங்களது பிரச்சினைகளை முன்னிறுத்தி போராடும்போது அதில் தமிழ் இளைஞர்கள் பங்குபற்றுவதால் தமிழ் மக்களுக்கு என்ன இலாபம் என்பதை தெரிந்துகொண்டுதான்போராடவேண்டும் என தமிழீழ விடுதலை இயக்கத்தின் செயலாளர் நாயகமும் மட்டக்களப்பு மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினருமான கோவிந்தன் கருணாகரம் தெரிவித்தார்.

மட்டக்களப்பில் உள்ள அவரது அலுவலகத்தில் நேற்று (திங்கட்கிழமை) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதன்போது மேலும் கருத்து தெரிவித்த அவர் –

மஹிந்த ராஜபக்ஷ குடும்பத்தை வீட்டுக்கு செல்லுமாறு கோரி கடந்த எட்டு தினங்களாக காலிமுகத்திடலில் சிங்கள இளையோரால் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலக வேண்டும், ஒட்டுமொத்த அமைச்சரவையும் பதவி விலகவேண்டும் உட்பட ஐந்து கோரிக்கைகளை முன்வைத்து இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்படுகின்றது.

இந்த நாடு இன்று பொருளாதார ரீதியாக அதலபாதாளத்திற்குச் சென்றுள்ளது. எவர் ஆட்சிக்கு வந்தாலும் இந்த பொருளாதாரத்தை தூக்கி நிமிர்த்தக்கூடிய நிலையில்லை. இந்த நிலை எவ்வாறு ஏற்பட்டது என்பதன் தரற்பரியம் தெரியாமல் இந்தப் போராட்டம் நடத்தப்படுகின்றது என்று நான் நினைக்கின்றேன்.

இந்த நாட்டில் சிறுபான்மை சமூகம் அடக்கி ஒடுக்கப்பட்டபோது அஹிம்சை ரீதியான போராட்டங்கள் தமிழ் மக்களின் உரிமைக்கான போராட்டம் ஆயுதப்போராட்டமாக மாற்றம் பெற்றபோது தமிழ் மக்கள் மீதான யுத்தத்துக்காக இந்த நாட்டை மாறிமாறி ஆட்சிசெய்த அரசுகள் பில்லியன் கணக்கான டொலர்களை செலவு செய்ததே முதல்காரணமாகும்.

பண்டா–செல்வா ஒப்பந்தம் ஏற்பட்டபோது இந்த நாட்டில் ஓர் அரசியல் தீர்வு காணப்பட்டிருந்தால் மாறிமாறி வந்த அரசுகள் இந்தளவுக்கு யுத்தத்துக்கு டொலர்களைச் செலவிடவேண்டிய தேவையேற்பட்டிருக்காது.

தற்போதுகூட சிங்கள இளையோர்களால் முன்னெடுக்கப்படும் போராட்டம் தாங்கள் முன்வைத்துள்ள ஐந்து கோரிக்கைகளில் முதலாவதாக புரையோடிப்போயுள்ள இனப்பிரச்சினைக்கான நிரந்தர அரசியல் தீர்வை வரும் அரசாங்கம் முன்வைக்கவேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்திருக்கவேண்டும் என்பது எனது கருத்தாகும்.

பண்டாரநாயக்க தலைமையிலான ஆட்சி சிங்கள சட்டத்தை மட்டும் கொண்டுவந்தபோது தமது மொழி உரிமைக்காக இதே காலி முகத்திடலில் ஜூன் மாதம் 05ஆம் திகதி தமிழ்த் தலைமைகள் சத்தியாக்கிரகப் போராட்டம் செய்தார்கள்.

அந்தப் போராட்டத்தின்போது சிங்கள காடையர்கள் ஏவிவிடப்பட்டு தமிழ்த் தலைமைகளின் மண்டைகள் உடைக்கப்பட்டமையுடன் காதுகள் கடித்து துப்பப்பட்ட வரலாறுகள் எங்களுக்குத் தெரியும்.

தமிழ் மக்கள் தற்போதுள்ள நிலையில் இந்தப் போராட்டத்தை நாங்கள் எவ்வாறு பயன்படுத்தப் போகின்றோம் என்பதை சற்று சிந்திக்கவேண்டும். 2009 ஆம் ஆண்டு யுத்தம் மௌனிக்கப்பட்டபோது தமது உறவுகளை ஒப்படைத்த காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சொந்தங்கள் 1800 நாள்களையும் தாண்டி வடக்கு கிழக்கில் போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர்.

சிங்கள இளைஞர்களின் போராட்டத்தில் கலந்துகொள்ளுமாறு இன்று ஒரு சில தமிழ்த் தலைமைகள் அறைகூவல் விடுக்கின்றனர். இவ்வாறு அறைகூவல் விடுக்கும் அந்தப் பிரதிநிதிகள் வடக்கு, கிழக்கில் தமது உறவுகளைத் தேடிப் போராடும் போராட்டத்துக்கு இளைஞர், யுவதிகளை ஒருங்கிணைப்பதற்கு எந்த வித அக்கறையும் அற்றவர்களாகவே இருந்தனர்.

நாங்கள் பாதிக்கப்பட்ட சமூகம். யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பொருளாதாரத்தால் இன்று மின்சாரத்துக்கும் எரிபொருளுக்கும் பால்மாவுக்கும் போராடுகின்றார்களே தவிர இந்த பொருளாதார பின்னடைவு ஏற்பட்டதற்கான காரணத்தைக் கண்டறிந்து அதனை நிவர்த்திப்பதற்கான எந்த முயற்சியும் காட்டப்படவில்லை. – என அவர் மேலும் தெரிவித்தார்.

# வவுனியாவில் வீட்டில் பெண்ணின் சடலம்!

வவுனியா செட்டிகுளம் – நேரியகுளம் பகுதியில் வீட்டில் இருந்து பெண் ஒருவரின் சடலம் செட்டிகுளம் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

நேற்று (திங்கட்கிழமை) பிற்பகல் மேற்படி சடலம் மீட்கப்பட்டுள்ள நிலையில், இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது –

வவுனியா, செட்டிகுளம், நேரியகுளம் கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட சின்னக்குளம் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் கணவன், மனைவி ஆகிய இருவரும் வசித்து வந்த நிலையில் கணவன் வீட்டில் இருந்து தேவை நிமித்தம் காலையில் வெளியில் சென்றுள்ளார்.

வெளியில் சென்ற கணவன் காலை 11 மணியளவில் வீட்டுக்கு வந்த போது வீட்டில் மனைவி தூக்கில் தொங்கிய நிலையில் காணப்பட்டுள்ளார். இதனையடுத்து அயலவர்களின் உதவியுடன் பொலிஸாருக்கு கணவரால் தகவல் வழங்கப்பட்டதையடுத்து சம்பவ இடத்துக்கு வந்த பொலிஸார் பெண்ணின் சடலத்தை மீட்டுள்ளனர்.

ஜேசுதாசன் மெட்டிலம்மா என்ற 57 வயதுடைய பெண்ணே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவார். இது தொடர்பில் செட்டிகுளம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# குளிக்கச் சென்ற மாணவன் நீரில் அள்ளுண்டு மாயம்!

## பண்டாரகமவில் சம்பவம்

பண்டாரகம உயன்வத்தை குளத்துக்கு குளிக்கச் சென்ற இளைஞர்களில் ஒருவர் நீரில் அள்ளுண்டு காணாமல் போயுள்ளார் என பண்டாரகம பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஹோமாகம பிரதேசத்தைச் சேர்ந்த 9 இளைஞர்கள் மோட்டார்சைக்கிள் மற்றும் ஓட்டோ வாகனங்களில் உயன்வத்தை குளத்துக்கு குளிக்கச் சென்ற போதே மேற்படி இளைஞர் நீரில் முழ்கி காணாமல் போயுள்ளார் என பண்டாரகம பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு நீரில் அள்ளுண்டவர் 19 வயதுடைய ஹோமாகம அதுருகிரிய மற்றும் சாந்தலொக்கம பிரதேசத்தைச் சேர்ந்தவராவார்.

இளைஞனை தேடும் பணிகளில் பாணந்துறை பொலிஸ் உயிர்காப்பு படை மற்றும் பிரதேசவாசிகள் இணைந்து ஈடுபட்டு வருகின்றனர் எனப் பொலிஸார் மேலும்தெரிவித்துள்ளனர். சம்பவம் தொடர்பில் பண்டாரகம பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# சிங்கப்பூர் செஞ்சிலுவைச் சங்கத்தினரிடமிருந்து மனிதாபிமான அடிப்படையில் ஒரு லட்சம் டொலர்

பொருளாதார நெருக்கடிகளால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்காக மனிதாபிமான அடிப்படையில் சிங்கப்பூர் செஞ்சிலுவை சங்கத்தின் ஊடாக ஒரு லட்சம் அமெரிக்க டொலர்களை வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அந்நாட்டு வெளிநாட்டலுவல்கள் அமைச்சு தெரிவித்துள்ளது.

கடந்த வெள்ளியன்று அறிக்கையொன்றை வெளியிட்டுள்ள சிங்கப்பூர் வெளிநாட்டலுவல்கள் அமைச்சு இதனைக் குறிப்பிட்டுள்ளது.

சிங்கப்பூர்செஞ்சிலுவைசங்கத்தால்பொருளாதார நெருக்கடிகளால் பாதிக்கப்பட்டுள்ள இலங்கையர்களுக்காக மனிதாபிமான அடிப்படையில் ஒரு லட்சம் டொலர்களை வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதனை உடனடித்தேவையாகவுள்ள மருந்துகள் உள்ளிட்ட ஏனைய அத்தியாவசிய தேவைக்காக உபயோகிக்க முடியும் என்று சிங்கப்பூர் வெளிநாட்டலுவல்கள் அமைச்சு தெரிவித்துள்ளது.

இலங்கையில் அவசர தேவைக்கான அத்தியாவசிய மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்களுக்கு பாரிய தட்டுப்பாடு நிலவுகின்றமையால் பல சத்திரசிகிச்சைகள் இடை நிறுத்தப்பட் டுள்ளன என இலங்கை மருத்துவ சங்கம் அண்மையில் தெரிவித்திருந்தது. இந்த நிலைமை, வைத்தியசாலைகளில் செயற்பாடுகளைக் குறைக்க சுகாதார அதிகாரிகளை கட்டாயப்படுத்தியுள்ளதோடு, நோயாளிகளுக்கு மருந்துகளை வழங்குவதையும் மட்டுப்படுத்தியுள்ளது. இது நாட்டில் மனிதாபிமான நெருக்கடியை ஏற்படுத்தக்கூடும் என்று சிங்கப்பூர் செஞ்சிலுவை சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்களை வழங்கி, இந்தச் சமூகங்களுக்கு ஆதரவளிக்க நன்கொடைகளை திரட்டுவதற்கான பொது நிதி திரட்டும் செயற்திட்டத்தை சிங்கப்பூர் செஞ்சிலுவை சங்கம் அண்மையில் ஆரம்பித்திருந்தது.

சுதந்திரத்தின் பின்னர் இலங்கை மிக மோசமான பொருளாதார நெருக்கடியில் உள்ளது. அத்தியாவசியப் பொருள்களுக்கான கடுமையான தட்டுப்பாடு மற்றும் நாளாந்த மின்விநியோகத்தடை ஆகியவை மக்களுக்குப் பரவலான நெருக்கடிகளை ஏற்படுத்துகின்றமை குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் Kalaikkathir

# ரூபாவின் பெறுமதி பாரிய வீழ்ச்சியால் மருத்துவ உபகரணங்கள் தட்டுப்பாடு

பல மாதங்களாக, மருத்துவர்கள், மருந்தாளர்கள், மருந்து நிறுவனங்கள், இறக்குமதியாளர்கள் மற்றும் பல அதிகாரிகள் உட்பட நாட்டின் சுகாதாரத் துறையின் பல்வேறு பங்குதாரர்கள், இலங்கையில் நிலவும் மிக மோசமான நிலைமையை எச்சரித்தனர்.

அரசாங்கம் மீண்டும் மீண்டும் பற்றாக்குறையை மறுத்ததால், தற்போது வைத்தியசாலைகளில் பாரிய மருந்து மற்றும் மருத்துவ உபகரணத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இலங்கையில் ஏற்பட்டுள்ள எரிபொருள் தட்டுப்பாட்டைத் தொடர்ந்து, கடுமையான அத்தியாவசிய மருந்து தட்டுப்பாடு தற்போது தலைவிரித்தாடியுள்ளது என்பது இரகசியமான விடயமல்ல.

அமெரிக்க டொலருக்கு நிகரான ரூபாவின் மதிப்பு சரிவால், நாட்டின் பொருளாதாரம் நேரடியாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வால் சுகாதாரத் துறை மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக, அகில இலங்கை தனியார் மருந்தக உரிமையாளர்கள் சங்கம், அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் மற்றும் சுகாதாரத் துறையுடன் தொடர்புடைய பல நிறுவனங்கள் மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட வாய்ப்புள்ளதாகத் தெரிவித்தன.

அமெரிக்க டொலருக்கு நிகரான ரூபாவின் மதிப்பு பெருமளவில் சரிந்ததன் விளைவாக, மருந்து தயாரிப்பு நிறுவனங்கள் மற்றும் இறக்குமதியாளர்கள் மருந்தகங்களுக்கு மருந்து வழங்குவதை நிறுத்திவிட்டதாக அகில இலங்கை தனியார் மருந்தக உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

பெரும்பாலான மருந்துப் பொருள்கள் கடனின் அடிப்படையில் இறக்குமதி செய்யப்பட்டன.

எனவே, குறைந்த விலையில் இந்தப் பொருள்களை உள்ளூர் சந்தையில் விற்கும்போது உற்பத்தியாளர்கள் மற்றும் இறக்குமதியாளர்கள் பெரும் நஷ்டத்தைச் சந்திக்க நேரிடும்.

அமெரிக்க டொலருக்கு நிகரான ரூபா மதிப்பு வீழ்ச்சியால் நாட்டில் அத்தியாவசிய மருந்துகள் மற்றும் உபகரணங்களுக்கு 25 சதவீதத்துக்கும் அதிகமான தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகவும், இது பாரிய ஆபத்தான நிகழ்வாக மாறும் எனவும் தெரிவித்தனர்.

தற்போது, பெரசிட்டமோல், பெனடோல், பனடீன் போன்ற பிரபலமான மருந்துகளில் பெரும்பாலானவை பற்றாக்குறையாகவே காணப்படுகின்றன.

மேலும், நாட்டில் குழந்தைகளுக்கு வழங்கப்படும் அன்டிபயாடிக் சிரப்புகளுக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

அடிக்கடி ஏற்படும் மின்வெட்டு காரணமாக, இன்சுலின் குப்பிகள், சில வகையான தடுப்பூசிகள், கண் சொட்டு மருந்துகள் மற்றும் சப்போசிட்டரிகள் போன்ற சில வகையான மருந்துகளை பொருத்தமான குறைந்த வெப்பநிலை வரம்பில் வைத்திருப்பதில் மருந்தகங்கள் சிக்கலை எதிர்கொள்கின்றன.

மேலும் பல மருந்தகங்கள் மின் பிறப்பாக்கியை கொண்டிருந்தாலும், அவற்றை இயக்குவதற்கு போதுமான எரிபொருளைப் பெற முடியவில்லை என அகில இலங்கை தனியார் மருந்தக உரிமையாளர்கள் சங்கம் மேலும் தெரிவித்துள்ளது.

இதய நோய் , புற்றுநோய், நீரிழிவு நோயாளிகள் மற்றும் காய்ச்சல், இருமல் மற்றும் சளி போன்ற தொற்று நோய்களால் பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்கு வழங்கப்படும் 237 அத்தியாவசிய மருந்துகளின் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

இதேவேளை, நன்கொடையாளர்களுக்கு அரசாங்கம் அல்லது சுகாதார அமைச்சின் மீது நம்பிக்கை இல்லை என்பதால், மருந்து மற்றும் மருத்துவ உபகரணங்களை இறக்குமதி செய்வதற்கான வெளிப்படையான பொறிமுறையை நடைமுறைப்படுத்துமாறு அரசாங்கத்திடம் அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

எனவே, தேசிய மற்றும் சர்வதேச நன்கொடையாளர்களின் உதவிகளை ஒருங்கிணைக்க அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் ஒரு குழுவை நியமித்துள்ளது.

இதன்படி, நாட்டின் சுகாதார அமைப்புக்கு உதவ 1,000 இற்கும் மேற்பட்ட நன்கொடையாளர்கள் தங்கள் விருப்பத்தை அறிவித்துள்ளனர்.

மேலும், நன்கொடையாளர்கள், அரசாங்கம் மற்றும் சுகாதார அமைச்சின் பொறிமுறைகள் மீது தங்களுக்கு நம்பிக்கை இல்லை எனவும், அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் எடுத்துள்ள ஒருங்கிணைப்புப் பொறுப்பு பாராட்டுக்குரியது எனவும் தெரிவித்துள்ளனர்.

இதற்கிடையில், குழந்தைகள் மற்றும் பச்சிளம் குழந்தைகளின் காற்றோட்டத்துக்கான எண்டோட்ராஷியல் குழாய்கள் இல்லாததால், நாட்டில் உள்ள அனைத்து குழந்தை மருத்துவர்களும் இக்கட்டான நிலையில் இருக்கின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

மிக விரைவில் அனைத்து வைத்தியசாலைகளிலும் எண்டோட்ராஷியல் குழாய்களின் அனைத்து இருப்புகளும் தீர்ந்துவிடும் என்றும், பச்சிளம் குழந்தைகளை காற்றோட்டம் செய்வதற்கு எண்டோட்ராஷியல் குழாய்களை மீண்டும் பயன்படுத்த வேண்டிய நிலைக்கு வைத்தியசாலைகள் தள்ளிவிடப்பட்டுள்ளன எனவும் இது முற்றிலும் ஏற்றுக்கொள்ள முடியாத கவலைக்குரிய விடயமாகும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

நாட்டில் நிலவும் பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடி காரணமாக, வைத்தியசாலை வலையமைப்பில் மருத்துவப் பொருள்கள் தீர்ந்துவிட்டன. எனவே, வைத்தியர்கள் நாட்டில் மீண்டும் பயன்படுத்தக்கூடிய வென்டிலேட்டர் சர்க்யூட்களைப் பயன்படுத்துவதற்கான விதிமுறைகளை மாற்ற வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர்.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அசேல குணவர்தன, தடையற்ற சுகாதார சேவைகளை பேணுவதற்கும், இலங்கைக்கு மருந்து மற்றும் உபகரணங்களை நன்கொடையாக வழங்குவதற்கும் உத்தியோகபூர்வ இணைப்பாளர் ஒருவரை அண்மையில் நியமித்தார்.

இதற்கிடையில், மருந்துகளின் விலையை 20 சதவீதத்திற்கு அதிகரிக்க மருந்து இறக்குமதியாளர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக தேசிய ஔடத ஒழுங்குமுறை ஆணையம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## வீட்டில் கஞ்சா செடிகள் வளர்த்த ஒருவர் புத்தளத்தில் கைதானார்!

புத்தளம் கல்லடி பகுதியில் நபர் ஒருவர் வீட்டில் கஞ்சா செடி வளர்த்த குற்றச்சாட்டில் விமானப்படைப் பொலிஸாரால் நேற்று (திங்கட்கிழமை) காலை கைது செய்யப்பட்டுள்ளார்.

புத்தளம் கல்லடி பகுதியில் வீட்டு முற்றத்தில் கஞ்சா செடிகள் வளர்க்கப்பட்டு வருவதாக பாலாவி விமானப்படை புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைக்கெப்பெற்ற இரகசியத் தகவலுக்கமைய பொலிஸாருடன் இணைந்து சுற்றிவளைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட போதே கஞ்சா செடிகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இதன்போது கைது செய்யப்பட்ட சந்தேக நபர் மற்றும் கைப்பற்றப்பட்ட கஞ்சா செடிகள் புத்தளம் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதையடுத்து மேலதிக விசாரணைகளைப் புத்தளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## புதிய அமைச்சர்களை வாழ்த்திய பந்துல!

புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட அமைச்சர்களுக்கு எனது மனமார்ந்த வாழ்த்துக்கள் என முன்னாள் வர்த்தகத் துறை அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

தனது முகநூலில் இது தொடர்பில் அவர் பதிவொன்று இட்டுள்ளார்.

18 அமைச்சர்களைக் கொண்ட புதிய அமைச்சரவை நேற்று முற்பகல் பதவியேற்றது.

கடந்த காலங்களில் பதவி வகித்த சிரேஷ்ட அமைச்சர்கள் பலர் புதிய அமைச்சரவையில் பதவி ஏற்கப் போவதில்லை என அறிவித்திருந்த நிலையில், பல புது முகங்களுக்கு தற்போது அமைச்சுப் பதவி வழங்கப்பட்டுள்ளது.

இலங்கையில் ஏற்பட்ட கடுமையான பொருளாதார நெருக்கடியின் காரணமாக பொதுமக்கள் ஒன்று திரண்டு போராட்டங்களையும் அழுத்தங்களையும் கொடுத்த நிலையில் முன்னர் இருந்த அமைச்சரவை இரவோடு இரவாக பதவி விலகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## தந்தையை தாக்கி கொலைசெய்த மகன்!

### திருகோணமலையில் கைது

திருகோணமலை, ஏப்ரல் 19

திருகோணமலை – பாலத்தடிச்சேனை பகுதியில் மகனின் தாக்குதலால் தந்தையொருவர் உயிரிழந்தார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஞாயிற்றுக்கிழமை இரவு இடம்பெற்ற இச்சம்பவம் தொடர்பில் தெரியவருகையில் –

மதுபோதையில் வந்த மகன் உறங்கிக்கொண்டிருந்த தந்தையைத் தாக்கியதில் அவர் உயிரிழந்துள்ளார்.

மூதூர் – பாலத்தடிசேனை பகுதியைச் சேர்ந்த முருகப்பிள்ளை கைலாசப்பிள்ளை (வயது – 59) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

ஏற்கனவே குடும்பத் தகராறில் மகன் தந்தையைத்தாக்க முற்பட்ட நிலையிலும், ஞாயிற்றுக்கிழமை இரவு மதுபோதையில் வந்த மகன் உறங்கிக்கொண்டிருந்த தந்தையைத் தாக்கினார் எனவும் ஆரம்பக்கட்ட விசாரணை மூலம் தெரியவந்துள்ளது.

உயிரிழந்தமை தொடர்பில் சந்தேகத்தின் பெயரில் மகனான கே.விநோதன் (வயது – 29) என்பவரைக் கைது செய்துள்ளதாகவும் உயிரிழந்தவரின் சடலம் பிரேத பரிசோதனைக்காகத் திருகோணமலை பொது வைத்தியசாலைக்குக் கொண்டு செல்ல மூதூர் நீதிமன்றம் அனுமதி வழங்கியதாகவும் பொலிஸார் கூறியுள்ளனர்.

இந்த மரணம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக மூதூர் பொலிஸார் தெரிவித்தனர்.

## முஸ்லிம் கட்சிகளால் வேடிக்கையாக மாற்றப்பட்ட ஒழுக்காற்று நடவடிக்கை

### இம்ரான் எம்.பி. சாட்டை

ஒழுக்காற்று நடவடிக்கை முஸ்லிம் கட்சிகளால் வேடிக்கையாக மாற்றப்பட்டுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மக்ரூப் தெரிவித்துள்ளார்.

கிண்ணியாவில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் வைத்து உரையாற்றும் போதே அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

ஒழுக்காற்று நடவடிக்கை என்பது முஸ்லிம் கட்சிகளால் வேடிக்கையாக மாற்றப்பட்டுள்ளது. இருபதாம் திருத்தச் சட்டத்தின் பின் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்கள்.

ஆனால் வழங்கப்பட்டதோ தேசிய அமைப்பாளர் போன்ற பதவிகள். மீண்டும் நிதி சட்டமூலம், வரவு செலவுத் திட்டம் போன்றவற்றில் அரசுக்கு ஆதரவாக வாக்களித்தார்கள்.

மீண்டும் ஒழுக்காற்று நடவடிக்கை என்றார்கள். நான்கு மாதங்களாக ஒன்றுமில்லை. ஆனால் இன்று அவர்கள் பஸிலில் ராஜபக்ஷவுடன் அமைச்சுகளுக் காகப்பேரம்பேசிக்கொண்டிருக்கின்றனர்.

முஸ்லிம்காங்கிரஸ் தலைவர் ஹக்கீம் பிரதி சபாநாயகர் வாக்களிப்பில் எதிர்க் கட்சிகளுடன் சேர்ந்து வாக்களிக்காவிட்டால் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்கிறார்.

வரவு செலவுத் திட்டத்தின் பின்னர் கூறிய ஒழுக்காற்று நடவடிக்கையையே இன்னும் காணவில்லை.

இதில் தற்போது புதிதாக ஒன்று அமைச்சுப் பதவிகளுக்குப் பேரம் பேசிக்கொண்டிருப்பவர்கள் எவ்வாறு எதிர்க்கட்சிகளுடன் இணைந்து வாக்களிப்பார்கள்.

இது ஒன்றும் ஹக்கீமுக்கு தெரியாமலில்லை. மக்களை ஒழுக்காற்று நடவடிக்கை என்னும் பெயரில் அவரும் ஏமாற்றி வருகிறார் என்பதே உண்மை.

ராஜபக்ஷக்கள் எவ்வாறு சிங்கள மக்களை ஏமாற்றிவந்தனரோ அதுபோன்றே முஸ்லிம்களை இந்த முஸ்லிம் கட்சித் தலைவர்கள் ஏமாற்றி வருகின்றனர் எனக் குறிப்பிட்டுள்ளார்.

காலைக்கதிர்
Kalaikkathir

# நாடாளுமன்றத்தின் முக்கிய பதவி நிலைகள்

-சி. குகதாசன் -
(அரசறிவியல்துறை,
யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம்)

நாட்டின் நாட்டின் அரசமைப்பில் அறிமுகம்செய்யப்பட்டபிரதானஅம்சங்களில் ஒன்றாக நாடாளுமன்றம் காணப்படுகிறது.

அந்த அரசமைப்பின் கீழ் நாடாளுமன்றத்தின் முக்கிய பதவி நிலைகளை நோக்குவது பொருத்தமானது.

**சபாநாயகர்**

தற்போது நடைமுறையில் உள்ள நாடாளுமன்றத்தின் முக்கியமான பதவி நிலைகளில் ஒன்றாக சபாநாயகர் பதவி விளங்குகின்றது. நாடாளுமன்ற ஜனநாயகம் நிலவும் நாடுகளிற் பதவி வழியாக மாத்திரமின்றி மரபு வழியாகவும் சபாநாயகளுக்கு மிக அதி உயர்ந்த ஸ்தானம் உண்டு.

நாடாளுமன்றத்தினதும், சட்டத்திட்டங்களினதும் காலவனாக விளங்குபவரும் அவரே. நாடாளுமன்ற உறுப்பினர் தம் பாதுகாவலனாக என்றும் ஏற்றிப் போற்றுவதும் சபாநாயகரைத்தான். சபாநாயகர், நாட்டின் ஜனாதிபதிக்கு அடுத்ததாக உள்ள பிரதம மந்திரிக்கு பின்னர் 3ஆவது முக்கியத்துவம் வாய்ந்த இடத்தை வகிக்கின்றார். நாடாளுமன்றம் சபாநாயகர் இல்லாமல் செயற்பட முடியாது. புதியதாக தெரிவு செய்யப்பட்ட நாடாளுமன்றத்தின் முதலாவது பணி ஒரு சபாநாயகரை தேர்ந்தெடுப்பதாகும். (1978 அரசமைப்பு உறுப்புரை 64)

சுதந்திரமாக செயற்படுவதும் பக்க சார்பின்மையுமே சபாநாயகர் பதவியின் முக்கிய பண்புகளாகும்.

இலங்கையில் சபாநாயகர் பதவியானது நீண்டகாலமாக ஓர் அரசியல் நியமனமாகவே கருதப்பட்டு வந்திருப்பினும் தொடர்ந்து தெரிவு செய்யப்பட்டு வந்த அனைத்து சபாநாயகர்களும் அவர்களின் கடமைகளைப் பக்கச் சார்பில்லாமலும் அரசியல் நடுநிலையாகவுமே செய்து வந்துள்ளார்கள். சபாநாயகராக தெரிவு செய்யப்பட்டவுடனேயே, நாடாளுமன்றத்தில் அவர் அவரது கட்சியை பிரதிநிதித்துவம் செய்வது முடிவுக்கு வருகிறது. அவர் எந்த விதமான கட்சிப் பதவிகளும் வகிக்காதமையோடு கட்சி கூட்டங்களிலும், நிகழ்வுகளிலும் பங்களிக்கவும் மாட்டார்.


தற்போதைய சபாநாயகர்

அத்துடன் அரசியற் பிரச்சினைகளிலிருந்து, கட்சி பிரசாரங்களிலிருந்தும் விலகி நிற்பார். அடுத்து வரும் தேர்தலில் முன்னாள் சபாநாயகர் ஒரு வேட்பாளராக நிற்பது வழக்கத்தில் இருந்தது. 1952, 1956ஆம் ஆண்டு தேர்தல்களில் அக்கால கட்ட சபாநாயகரான அல்பர்ட் எவ். பீரிஸ் சுயேச்சை வேட்பாளராக நின்ற பொழுது அவருக்கு எதிராக எந்த அரசியல் கட்சியும் வேட்பாளர்களை நியமிக்கவில்லை. துரதிஷ்ட வசமாக இந்த செயல்முறை தொடர்ந்தும் பின்பற்றப்படவில்லை. இன்றைய தேர்தல் முறைகளில் இது சாத்தியப்படாத ஒன்றாகவும் இருக்கிறது.

சபாநாயகர் ஓர் அரசியல் கட்சியைச் சேர்ந்தவராகவும் ஓர் அரசியல் கட்சியின் தெரிவினால் அந்த பதவியைப் பெற்றிருந்தாலும் பக்க சார்பில்லாமல் அவர் தனது கடமைகளைப் புரிய வேண்டுமென எதிர்பார்ப்பர்க்கப்பட்டது.

அதே சமயம் சபாநாயகர் சபை உறுப்பினர்கள் எக்கட்சியாக இருந்தாலும் அனைவரினதும் ஆதரவைப் பெறும் உரிமையைக் கொண்டிருப்பார். விதிகளில் குறிப்பிட்டுக் கூறப்படாத விடயங்களுக்கு விதிகளையும் வழிகளையும் ஏற்படுத்தும் மேலதிக அதிகாரங்களை சபாநாயகர் கொண்டிருப்பார்.

சபாநாயகர் பதவயினது பிரதம பண்பு நடுவு நிலைமையும் அதிகார ஆளுமையுமேயாகும் என்று விவரிக்கின்றார் பிரித்தானிய நாடாளுமன்ற நடைமுறைகளில் மகா பண்டிதர் எனப் போற்றப்படும் எஸ்கின்மே அவர்கள்.


செங்கோல்

சபாநாயகர் கட்சிக்கு அப்பால் பின்வருமாறு செயற்படுகிறார்:-

நாடாளுமன்ற உறுப்பினரொருவர் சபாநாயகர் பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்படும் வரைத் தான் அவர் ஓர் அரசியற் கட்சிக்குச் சொந்தமானவராக இருப்பார். சுபாநாயகராக தேர்ந்தெடுக்கப்படும் ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட்ட அக்கணமே தாம் எந்தவொரு கட்சிக்கும் உரியவரல்லர் என்ற கோட்பாட்டுக்குள் உட்பட்டு விடுவார். இலங்கை நாடாளுமன்றத்தில் இதுவரை எட்டு சபாநாயகர்களின் கீழ் கடமையாற்ற கிடைத்த நீண்ட வரலாறுகளை நோக்கும் போது சபாநாயகர் பதவியின் மகத்துவத்தை பரிபூரணமாக உணர முடிகிறது.

1965 ஆம் ஆண்டு சேர். அல்பிரட் பீரிஸ் சபாநாயகராகத் தெரிவு செய்யப்பட்டமையையடுத்து சபையிலே சம்பிரதாயப்பூர்வமாக உறுப்பினர்களால் நிகழ்த்தப்பட்ட வாழ்த்துரை அரசியற் சட்ட ரீதியிலும் சபாநாயகர் முதன்மைப் பெறுகிறார். சுபாநாயகர் ஒருவருக்குள்ள தனித்துவமான சிறப்புகள் பல அரசியற் சட்ட ரீதியானாவை. நாடாளு மன்றம் ஒரு சட்ட மூலத்தை விவாதித்து நிறைவேற்றி வருகின்றதென்றால் அது சபையில் நிறைவேறியதும் சட்டமாகிவிடாது. நாடாளுமன்றத்தினால் அங்கிகரிக்கப்பட்ட சட்ட மூலம் சபாநாயகரது சான்றிதழைப் பெற்ற அந்த கணத்திலேதான் சட்ட அந்தஸ்த்தைப் பெறுகின்றது.

இலங்கையின் அதி உயர்ந்த பிரமுகர்களின் வரிசையில் ஜனாதிபதி, பிரதமர் ஆகியோருக்கு அடுத்த ஸ்தானம் சபாநாயகருக்கே உரியதாகும்.

அதிகார சின்னத்தின் ரீதியில் சபாநாயரின் பதவி நிலைலய நோக்கும் போது தமது அதிகாரத்தின் சின்னமாகவே சபாநாயகர் செங்கோலைத் தன்னகத்தே கொண்டுள்ளார். சட்டம், ஒழுங்கு, மரபு என்பவற்றிற்கேற்ப சபையின் விவாதங்களை ஒழுங்கான முறையில் வழிநடாத்திச் செல்வது சபாநாயகரது கடமையாகும். நாடாளுமன்ற நடைமுறைகளை ஆராயும் பொழுது, சபாநாயகர் ஓர் அறிவுரையைப் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு கூறும்பொழுது அதை எல்லோரும் மிகவும் அமைதியுடனிருந்து செவிமடுத்தல் வேண்டும். இந்தச் சந்தர்ப்பங்களில் யாராவது ஓர் உறுப்பினர் உரையாற்றிக் கொண்டிருந்தால் உடனடியாக அவர் தமது உரையை நிறுத்தி ஆசனத்தில் அமர்ந்தல் வேண்டும். சபையில் சபாநாயகர் உரையாற்றும் பொழுது எந்தவொரு உருப்பினரும் தமது ஆசனத்தை விட்டு அகலக்கூடாது. எவரும் சபாநாயகரது நடைமுறைகளை விமர்சிக்க முடியாது.

நீதிமன்ற ரீதியில் சபாநாயகரின் பதவி நிலையினை நோக்கும் போது சபைநீதிமன்றமாக அமர்ந்து சிறப்புரிமை மீறல் பற்றிய குற்றச்சாட்டுகளை விசாரிக்கும் பொழுது அத்தகைய நீதி விசாரணைகளுக்குத் தலைமைத் தாங்கி தீர்ப்புகளை வழங்கும் அதிகாரத்தையும் சபாநாயகர் தன்னைத்தே கொண்டிருக்கிறார். மேற்கூறியவகையில் சபாநாயகரின் பதவி நிலை காணப்படுகிறது.

**நாடாளுமன்றத்தின் செயலாளர் நாயகம்**

நாடாளு மன்ற பதவி நிலையில் முக்கியமான ஒரு பதவி நிலையாக நாடாளு மன்ற செயலாளர் நாயகம் காணப்படுகின்றார். நாடாளுமன்றத்தில் செயலாளர் நாயகத்தின் பதவி அரசமைப்பினால் பாதுகாக்கப்பட்டுள்ளதுடன் தனித்துவமானதாகவும் உள்ளது. நாடாளுமன்றத்துடன் சம்பந்தப்பட்ட அலுவல்கள் அனைத்தையும் பற்றி அவை அரசமைப்புடனோ, நாடாளுமன்ற நிர்வாகக் கட்டமைகளுடனோ, நாடாளு மன்ற நிர்வாக கடமைகளுடனோ தொடர்புடைய எதுவாக இருப்பினும், செயலாளர் நாயகம் அறிந்து வைத்திருக்க வேண்டும் எனும் காரணத்தினால் அவருடைய கடமையை அசாதாரணமானதொன்று என விளக்குகின்றனர். எந்தப் பிரச்சினை ஏற்பட்டாலும் செயலாளர் நாயகம் அதற்கு உடனடியாக அதிகாரப்பூர்வமான தீர்வை கொடுக்க வேண்டுமென உறுப்பினர்கள் எதிர்பார்க்கின்றார்கள். நாடாளுமன்ற செயலாளர் நாயகத்தின் பதவி சபையின் குமஸ்தா என்றும் அழைக்கப்படுகிறது.

ஏனைய பணியாளர் அவரவர் பணியில் ஈடுபட முதல் நடவடிக்கையாக பேரவை செயலதிகாரி நாடாளுமன்றத்தைக் கூட்டுவதற்கான ஜனாதிபதியின் பிரகடனத்தை வாசிப்பார். இதனையடுத்து உடனடியாக சபாநாயகர் ஒருவரைத் தெரிவு செய்ய பேரவை முற்படும். இதற்கான நடைமுறைகளை செயற்படுத்தும் பொறுப்பு பேரவை செயலதிகாரியைச் சார்ந்ததாகும்.

சபாநாயகருக்கு உரித்தான அனைத்து அதிகாரங்கள் மற்றும் செயற்பாடுகள் தொடர்பாக சபாநாயகருக்கு மற்றும் சபாநாயகரினூடாக சபைக்கும் ஆலோசகராக செயலாளர் நாயகம் இருக்கின்றார். அவர் சபாநாயகரின் அதிகாரத்துக்குக் கீழும் சபாநாயகரின் சார்பிலும் கடமையாற்றுகின்றார். சபாநாயகரும் செயலாளர் நாயகமும் நெருக்கமாக கூட்டு வைத்திருப்பதுடன் ஒருவர் மற்றொருவர் மேல் பரிபூரண நம்பிக்கையுள்ள உறவைக் கொண்டிருப்பார்.


நாடாளுமன்றில் சபாநாயகர் ஆசனம்

செயலாளர் நாயகத்தின் கடமைகள் இரு வகையானவை, நாடாளுமன்றம், நிர்வாகம் என்பனவாகும். செயலாளர் நாயகத்தின் கடமைகள் கடினமானவையாகவும். நுட்பமானவையுமாக விருக்கும்.

நாடாளு மன்ற உறுப்பினர்களுக்கு அவர்களின் கடமைகளை ஆற்றுவதற்கு வழிகாட்டும் பொறுப்பும் செயலாளர் நாயகத்துக்கு உண்டு.

இலங்கையிலும், வெளிநாடுகளிலும் ஒவ்வொரு நாளும் நடைபெறும் சம்பவங்கள் பற்றிய தகவல்கள்களை உறுப்பினர்கள் தெரிந்து கொள்வதற்காக நவீன தரமான நூல் நிலைய முறையொன்று செயலாளர் நாயகத்தின் மேற்பார்வையிலும், வழிகாட்டலிலும் இயங்குகிறது. செயலாளர் நாயகம் செயலகத்தின் உத்தியோகத்தர்களை நியமிப்பதற்கும், ஒழுங்கு நடவடிக்கை எடுக்கவும் அதிகாரத்தை கொண்டிருப்பார்.

**படைக்கல சேவிதர்**

நாடாளுமன்றத்தின் பதவி நிலைகளில் முக்கியமானவொன்றாக படைக்கல சேவிதர் பதவி காணப்படுகின்றது. நாடாளுமன்றத்தில் மிகவும் முக்கியம் வாய்ந்ததாக உள்ள படைக்கல சேவிதரின் பதவி பிரித்தானிய நாடாளு மன்ற வரலாற்றிலிருந்து தோன்றியதாகும். சுதந்திரம் பெற்றவுடன் இலங்கை, வெஸ்ட்மினிஸ்டர் பாரம்பரியத்தை அடிப்படையாகக் கொண்ட நாடாளு மன்ற முறைமையை பின்பற்றியது. அப்பொழுது படைக்கல சேவிதர் பதவி உருவாக்கப்பட்டது. அது நாடாளு மன்றத்தில் செயலாளர் நாயகத்தின் பதவிக்கு பின்னர் இரண்டாவது முக்கியத்துவம் வாய்ந்ததாக திகழ்கின்றது.

படைக்கல சேவிதர் செயலாளர் நாயகத்தினால் நியமிக்கப்படுகின்றார். அவருடைய கடமைகளை செய்வதற்காக சபாகூடத்தில் முக்கிய வாயிலை அடுத்துள்ள விசேட இடத்தில் வீற்றிருப்பார். அவருடைய கடமைகள், சம்பிரதாய சடங்குகள் ஒழுங்கைநிலைநாட்டுதல், செங்கோலின் பொறுப்பு, பாதுகாப்பு, அந்நியர்கள் நுழைவு, சபையினுள் இருக்கை வசதிகளை ஏற்படுத்திக் கெடுத்தல், கலரிகளை மேற்பார்வையிடல் போன்றவற்றைக் கொண்டிருப்பார்.

சம்பிரதாய பூர்வ வைபவங்கள் ரீதியில் படைக்கல சேவிதர் சடங்குகளின் பொறுப்பாளராக திகழ்வதோடு சம்பிரதாய சடங்குகளை ஏற்பாடு செய்யும் பொறுப்பையும் கொண்டிருப்பார். படைக்கல சேவிதர் தனது கடமைகளை நிறைவேற்றுவதில் செயலாளர் அதிகாரமளிக்கப்பட்டவர். ஒழுக்காறும் ஒழுங்கைப் பேணுதல் தொடர்பிலும் சபாநாயகரின் வழிகாட்டலில் நாடாளுமன்ற உறுப்பினர்களிடையே ஒழுக்கத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டும் பணியை படைக்கல சேவிதர் கவனித்துக் கொள்வார். நாடாளு மன்ற செயல் நடவடிக்கைகளை இடையூறு செய்தல் தொடர்ந்தும் நிலையியற் கட்டளைகளை மீறல் போன்ற அவையின் சட்டத்தை மீறினாலோ, அவமதித்தாலோ உறுப்பினர்களை சபையில் இருந்தும் நாடாளு மன்ற வளாகத்திலிருந்தும் இடைநிறுத்தும் அகற்றும் சபையின் கட்டளைகளை அவர் செயல்படுத்த வேண்டும். சபாநாயகரே சபையின்

☞12

காலைக்கதிர் Kalaikkathir

# அமைச்சர் பதவி சிறப்புரிமை அல்ல!

## அது பாரிய பொறுப்பு என்று ஜனாதிபதி சுட்டிக்காட்டு

அமைச்சர் பதவி என்பது சிறப்புரிமை அல்ல. அது ஒரு பாரிய பொறுப்பு ஆகும்.

– இவ்வாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நேற்று தெரிவித்தார்.

புதிய அமைச்சரவை பதவிப்பிரமாணம் செய்து கொண்டதன் பின்னர் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

இலங்கையின் வரலாற்றில் மிகவும் கடினமான அதேபோன்று, சவாலான பொருளாதார ரீதியாக, அரசியல் ரீதியாக, சமூக ரீதியாக நாடு தீர்மானமிக்கதொரு தருணத்தை எதிர்கொண்டுள்ள சந்தர்ப்பத்திலேயே இன்று நான் உங்களிடம் உரையாற்றுகின்றேன்.

இன்று சிரேஷ்ட நிலை பாராமல் புதிய அமைச்சர்களை நியமித்துள்ளேன். அமைச்சர் பதவி என்பது ஒரு வரப்பிரசாதம் அல்ல. அது ஒரு பாரிய பொறுப்பு ஆகும். அமைச்சர் என்ற முறையில் கூடுதல் சலுகைகள் எதையும் பயன்படுத்த வேண்டாம் என்று நான் உங்களிடம் கேட்டுக்கொள்கிறேன். நேர்மையான, திறமையான மற்றும் தூய்மையான நிர்வாகத்திற்காக அர்ப்பணிப்புடன் செயற்படுவதையே நான் உங்களிடம் எதிர்பார்க்கின்றேன்.

மேலும், உங்கள் கீழ் உள்ள நிறுவனங்களை ஊழலற்ற, மக்களுக்குச் சேவை செய்ய அர்ப்பணிப்புடன் செயற்படும் நிறுவனங்களாக மாற்றுங்கள். பல அரச நிறுவனங்கள் இன்று கடும் நிதி நெருக்கடியில் உள்ளன. அவை சரி செய்யப்படுவது மிகவும் அவசியம். நீங்கள் செய்ய வேண்டிய முக்கிய பணிகளில் இதுவும் ஒன்றாகும். இந்த அமைச்சுப் பதவிகள் கிடைத்தவுடன், தமக்குக் கிடைக்கும் அமைச்சுக்களிலும் நிறுவனங்களிலும் தொழில் வழங்குவதற்குத் தயாராகி வருவதை நாம் அறிவோம்.

இத்தகைய சூழ்நிலையில் அவ்வாறு செய்ய வேண்டாம் என்று கேட்டுக்கொள்கின்றேன். அமைச்சுக்கள் உண்மையில் செய்ய வேண்டியது தொழில் வாய்ப்புக்களை உருவாக்குவதுதான்.

மக்கள் கோரிய முறைமையை மாற்ற இன்றைய நெருக்கடி ஒரு நல்ல சந்தர்ப்பம். உங்களுக்கு வாய்ப்புக் கிடைத்துள்ளது. அதேநேரத்தில், இந்த இளைஞர்களிடம் அதற்கு உதவுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

கடந்த இரண்டரை வருடங்களாக நாங்கள் பெரும் சவால்களை எதிர்கொண்டுள்ளோம். கொரோனாத் தொற்று நோய் அதேபோன்று கடன் சுமை போன்ற விடயங்கள். அவ்வாறிருந்தாலும் எங்களாலும் பல தவறுகள் இடம்பெற்றுள்ளன. அவை சரி செய்யப்பட வேண்டும். அவற்றை சரி செய்து கொண்டே நாம் முன்னேற வேண்டும். மக்களின் நம்பிக்கையை மீண்டும் பெற வேண்டும்.

சர்வதேச நாணய நிதியத்துடன் ஒரு திட்டத்திற்கு இதற்கு முன்னர் சென்றிருக்க வேண்டும் என்று நான் நம்புகின்றேன். அதேபோன்று, இரசாயன உரங்களை விவசாயிகளுக்கு வழங்காமல் இருந்தது தவறு என நினைக்கிறேன். அவற்றை மீண்டும் வழங்க நடவடிக்கை எடுத்துள்ளோம்.

இந்தப் பொருளாதார நெருக்கடியால் ஏற்பட்ட பல சிக்கல்களால் இன்று மக்கள் மிகுந்த பாதிப்புக்குள்ளாகி இருக்கின்றனர். அதற்காக நான் மிகவும் வருந்துகின்றேன்.

வாழ்க்கைச் செலவைச் சமாளிக்க முடியாத மக்கள் அத்தியாவசியப் பொருள்களைப் பெற வரிசையில் நின்று நேரத்தைச் செலவழிப்பதால் ஏற்படும் வேதனையும், அசௌகரியமும், கோபமும் மிகவும் நியாயமானது.

கடந்த காலத்தில் என்ன குறைகள் ஏற்பட்டு இருந்தாலும், தற்போதைய சவால்கள் மற்றும் சிரமங்களை நிர்வகிப்பது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஜனாதிபதியான எனது பொறுப்பாகும். எந்தச் சிரமத்திற்கும் சவாலுக்கும் மத்தியிலும் அந்தப் பொறுப்பில் இருந்து விலக மாட்டேன் என்று என்னை நியமித்த மக்களிடம் உறுதியளிக்கிறேன்.

தற்போது சமூகம் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகளில் நாம் முன்னுரிமை வழங்க வேண்டியது, பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண்பதற்கே ஆகும். அதைத் தீர்க்காமல் வேறு எந்தப் பிரச்சினையையும் தீர்க்க முடியாது.

எனவே, நாட்டின் பொருளாதாரத்தை மீட்டெடுக்க நான் ஏற்கனவே பல முக்கிய முடிவுகளை எடுத்துள்ளேன்.

அதன் அடிப்படையான மற்றும் முக்கியமான நடவடிக்கைகளாக புதிய நிதி அமைச்சர் ஒருவர், நீண்டகால அனுபவமுள்ள மத்திய வங்கியின் புதிய ஆளுநர் மற்றும் திறைசேரியின் புதிய செயலாளரை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

பொருளாதார முகாமைத்துவம் தொடர்பாக அரசுக்கும் எனக்கும் ஆலோசனை வழங்குவதற்காக சர்வதேச அனுபவமும் பொருளாதார முகாமைத்துவத் துறையில் உயர் அங்கீகாரமும் கொண்ட மூன்று பொருளாதார நிபுணர்களை நியமித்துள்ளேன். மேலும், அரசுக்கு உதவுவதற்காக பொது மற்றும் தனியார் துறை நிபுணர்கள் அடங்கிய குழுவும் நியமிக்கப்பட்டுள்ளது.

இந்தக் குழுவுடன் இணைந்து கடந்த சில நாள்களாக நாட்டின் பொருளாதாரத்தை மீண்டும் நிலை நிறுத்த நாம் பல முக்கிய முடிவுகளை எடுத்துள்ளோம்.

நாம் எப்போதும் மக்களுக்கு உண்மையைச் சொல்ல வேண்டும். மக்களிடம் யதார்த்தத்தை மறைப்பதில் அர்த்தமில்லை. நீங்கள் பெறும் தகவல்களைப் பற்றி அறிவுபூர்வமாக விசாரித்து உண்மைகளைப் புரிந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பிரச்சினையை பப் ரிந்து கொண்டால் மட்டுமே தீர்வு காண முடியும். அதற்கு உங்கள் அனைவரின் ஒத்துழைப்பும் அங்கீகாரமும் அவசியம்.

இன்று நமது நாடு கடுமையான அந்நியச் செலாவணி பற்றாக்குறையையும் கடன் நெருக்கடியையும் சந்தித்து வருகின்றது. இந்த நேரத்தில் எங்களிடம் உள்ள மட்டுப்படுத்தப்பட்ட அந்நியச் செலாவணியை மக்களின் அத்தியாவசிய தேவைகளுக்குப் பயன்படுத்த வேண்டும். மேலும் அவசர அந்நியச் செலாவணி தேவைகளுக்குப் பணம் தேட வேண்டும்.

குறுகியகால வெளிநாட்டுக் கடனைத் திருப்பிச் செலுத்துவதில் உள்ள எங்களின் சிரமத்தை நாங்கள் ஏற்கனவே கடன் வழங்கியவர்களுக்கு தெரிவித்துள்ளோம். அதன்படி கடன் மறுசீரமைப்பு வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

புதிதாக நியமிக்கப்பட்டுள்ள எனது பொருளாதார முகாமைத்துவக் குழு ஏற்கனவே எமது நட்பு நாடுகளுடனும் சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி போன்ற சர்வதேச நிறுவனங்களுடனும் கலந்துரையாடல்களை ஆரம்பித்துள்ளது.

ஒரு மாதத்திற்கு முன்பு, சர்வதேச நாணய நிதியத்துடன் ஒரு வேலைத் திட்டத்தில் இணைய விருப்பம் உள்ளதாக அரசு அறிவித்தது. அந்தக் கலந்துரையாடல்களை முன்னெடுத்துச் செல்வதற்காக நிதி அமைச்சர் மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் ஏற்கனவே அமெரிக்கா சென்றுள்ளனர்.

எண்ணெய், மருந்துப் பொருள்கள் மற்றும் பிற அத்தியாவசியப் பொருள்களை இறக்குமதி செய்வதற்கு இந்தியாவிடமிருந்து கடன் வசதிகளைப் பெற்றுள்ளோம். மேலும், உலக வங்கி எரிவாயு, உரம், பால்மா மற்றும் மருந்துப் பொருள்கள் இறக்குமதிக்கு ஒத்துழைப்பு வழங்கவும் முன்வந்துள்ளது.

நாட்டு மக்களுக்கு தேவையான எண்ணெய் மற்றும் எரிவாயு தற்போது நாட்டுக்கு கிடைக்கப் பெற்றாலும், சமீப நாள்களாக அது முறையாக விநியோகிக்கப்படவில்லை. இதன் காரணமாக மக்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களை குறைக்கும் வகையில் நாம் தற்போது செயற்பட்டு வருகின்றோம்.

சந்தையில் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படுவதற்கு மற்றுமொரு முக்கிய காரணம், எதிர்காலத்தில் தட்டுப்பாடு ஏற்படும் என சந்தேகித்து மக்களால் பெருமளவில் எரிபொருள் களஞ்சியப்படுத்தப்படுகின்றமை ஆகும். இதன் காரணமாக நாட்டில் எரிபொருளுக்கான தேவை கணிசமான அளவு அதிகரித்துள்ளது.

மக்கள் படும் இன்னல்களைத் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளும் கும்பல் ஒன்றும் உருவாகி உள்ளது. இந்த நிலையைக் கட்டுப்படுத்தவும் அரசு தலையிட்டு வருகின்றது. இவ்வாறான இக்கட்டான சூழ்நிலையில், இவ்வாறான விடயங்களை தவிர்க்குமாறு நான் அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.

எதிர்வரும் வாரங்களில் எரிபொருள் மற்றும் எரிவாயு தட்டுப்பாட்டைக் கட்டுப்படுத்துவதற்குத் தேவையான தீர்வுகள் மற்றும் தீர்மானங்களையும் நாங்கள் ஏற்கனவே எடுத்துள்ளோம். நாம் அவற்றைச் செயற்படுத்தி வருகின்றோம்.

அண்மைக்காலமாக நீண்டகால மின்வெட்டுக்கு மின் உற்பத்தி நிலையங்களில் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்பட்டமையே காரணம் ஆகும்.

சிக்கல்களுக்கு மத்தியிலும் தேவையான எரிபொருளை பெற்றுக்கொண்டு, எதிர்வரும் காலத்தில் மின்வெட்டை இரண்டு மணித்தியாலங்களாக மட்டுப்படுத்திக்கொள்ள நாம் எதிர்பார்க்கின்றோம்.

குறுகியகால பிரச்சினைகளுக்கான தீர்வுகளைத் தேடுவதோடு, இந்த நிலை மீண்டும் ஏற்படாமல் தடுக்க நாம் நடவடிக்கை எடுக்க வேண்டும். அரசியல் காரணங்களுக்காக பல தசாப்தங்களாக காலதாமதமாகி வரும் சில தீர்மானங்களை எவ்வளவு கடினமானதாக இருந்தாலும் நாம் எடுக்க வேண்டியுள்ளது. பொருளாதாரத்தை சரியான திசையில் வழிநடத்தி, நமது எதிர்கால சந்ததியினரின் அபிலாகைளை பூர்த்தி செய்யும் வகையில் நாட்டை கட்டியெழுப்ப வேண்டிய பொறுப்பு இப்போது நமக்கு உள்ளது.

இன்று நாம் எதிர்கொள்ளும் கடுமையான சவாலை சமாளிக்க, சர்வதேச



நாணய நிதியம் போன்ற சர்வதேச நிறுவனங்களைப் போன்று நட்பு நாடுகளின் ஒத்துழைப்பும் அவசியம். நாட்டில் அரசியல் ஸ்திரத்தன்மை ஏற்பட்டால் மட்டுமே அந்த ஒத்துழைப்புகளைப் பெற முடியும்.

இந்தச் சந்தர்ப்பத்தில் நாட்டின் முன்னேற்றத்துக்காக அனைத்து அரசியல் கட்சிகளும் ஒன்றிணையுமாறு நான் அழைக்கின்றேன். மேலும், இந்த நெருக்கடியைத் தீர்ப்பதில் எங்களுடன் இணையுமாறு அனைத்துக் கட்சிகளுக்கும் நான் அண்மையில் அழைப்பு விடுத்தேன். என்னுடைய அழைப்பை ஏற்று எங்களுடன் இணைந்து பணியாற்ற அவர்களுக்கு இன்னும் வாய்ப்பு உள்ளது.

இந்தக் கடினமான காலங்களில், அரச நிர்வாகத்தை முன்னெடுக்கவும், சர்வதேச சமூகத்தை கையாளவும், குறிப்பிட்ட எண்ணிக்கையிலான அமைச்சர்களை நியமிக்க நான் முடிவு செய்தேன். புதிய அமைச்சரவையை நியமிப்பதில் ஆளும் கட்சியின் மூத்த உறுப்பினர்கள் பலர் தாமாக முன்வந்து அமைச்சரவையில் இருந்து விலகியதன் மூலம் இளைஞர்கள், படித்தவர்கள் என ஒரு புதிய குழுவுக்கு இடம் கொடுத்துள்ளனர்.

ஆசியாவின் பழமையான ஜனநாயக நாடுகளில் இலங்கையும் ஒன்று. அனைத்து குடிமக்களின் பாதுகாப்பும் சுதந்திரமும் அரசியலமைப்பின்படி செயற்படும் ஜனநாயக ஆட்சிமுறையில் தங்கியுள்ளது.

சமூகத்தின் மிகவும் சுறுசுறுப்பான பகுதியினரான இளைஞர்கள் தங்கள் அழுத்தத்தை அவர்களுக்கே உரிய வழியில் வெளியிடுவதில் எந்தத் தவறும் இருப்பதாக நான் நினைக்கவில்லை.

நாட்டின் எதிர்காலத்தைப் பொறுப்பேற்க உள்ள இளைஞர்கள் தங்கள் கருத்துக்களை தெரிவிக்கவும், ஆர்ப்பாட்டங்களை ஏற்பாடு செய்யவும், போராட்டங்களை நடத்தவும் இன்று முழுச் சுதந்திரம் பெற்றுள்ளனர்.

அவர்கள் தமது போராட்டங்களை ஆக்கபூர்வமாக முன்னெடுத்துச் செல்லும்போது, ஒழுக்கத்துடன் கடமையாற்றும் பொலிஸார், முப்படையினர் மற்றும் பாதுகாப்புப் பிரிவு அதிகாரிகளை குறிப்பாக நான் பாராட்டுகின்றேன்.

உங்களுக்குத் தெரியும், கடந்த இரண்டரை ஆண்டுகளில், நான் போராட்டங்களுக்கு, ஊர்வலங்களுக்கு, ஆர்ப்பாட்டங்களுக்கு இடமளித்து இருந்தேன். சுதந்திரம் வழங்கியுள்ளேன். என் அலுவலகத்திற்கு அருகில் வந்த போராட்டக்காரர்களைக் கலைக்கக்கூட நான் நடவடிக்கை எடுக்கவில்லை. இந்த எதிர்ப்பாளர்களில் பெரும்பான்மையானவர்கள் தங்கள் நாட்டை உண்மையாக நேசிக்கும் இளைஞர்கள் என்று நான் நம்புகின்றேன். அவர்கள் நாட்டுக்காக முன்வருவதை

☞ 12

# நாட்டு மக்களின் உணர்வுகளை கோட்டாபய மதிப்பவராக இல்லை

## செந்தில் தொண்டமானும் அதிருப்தி



மக்களின் உணர்வுகளுக்கு ஜனாதிபதி மதிப்பளிப்பவராகத் தெரியவில்லை என்றும் நாட்டில் ஏற்பட்டுள்ள அத்தனை பிரச்சினைகளுக்கும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியே பொறுப்புக்கூற வேண்டியவராக உள்ளாரென இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் செந்தில் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

10 நாள்களாகக் காலி முகத்திடலிலும் நாட்டின் ஏனைய பகுதிகளிலும் ஒரு பொதுவான நோக்கத்துக்காகவே தொடர்ந்தும் அனைவரும் போராடி வருகின்றனர்.

நாட்டில் எரிபொருள் மற்றும் எரிவாயுவுக்குப் பாரிய தட்டுப்பாடு நிலவிவருகிறது. அதேபோன்று அத்தியாவசியப் பொருள்களுக்கும் பாரிய தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதுடன், மின்சார துண்டிப்பு இடம்பெற்று வருகிறது. எங்கு பார்த்தாலும் மக்கள் வரிசையில் நிற்கும் காட்சிகளையே காணமுடிகிறது. எந்த பொருள்களையும் கொள்வனவு செய்ய முடியாத அளவிற்கு விலை உயர்வு ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு நாட்டு மக்களுக்கு சுமைக்கு மேல் சுமை அதிகரித்துள்ளது. வரலாறு காணாத ஒரு பொருளாதார நெருக்கடியை அரசின் செயற்பாட்டால் மக்கள் எதிர்கொண்டுள்ளனர். இவை அனைத்துக்கும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியே பொறுப்புக்கூற வேண்டியவராக உள்ளார்.

மக்களின் பிரச்சினைகள் ஒருபுறம் இருக்கின்ற சூழலில் அமைச்சரவை மாற்றுகிறோம், அரச அதிகாரிகளை மாற்றுகிறோம் எனக் கூறி அரசாங்கம் மக்களின் போராட்டத்துக்கு தீர்வுகாணாமை, அரசாங்கத்தின் முதிர்ச்சியற்ற தன்மையையே வெளிக்காட்டுகிறது.

மக்களின் கோரிக்கை ஒன்றாகவும் அதற்கு அரசாங்கம் வழங்கும் பதில் வேறொன்றாகவும் உள்ளது. இது தலைவலிக்கு மருந்து வாங்கச் சென்றால் மூட்டு வலிக்கு மருந்து கொடுப்பது போன்ற ஒரு செயற்பாடாகும்.

ஜானாதிபதி செயலகத்துக்கே ஜனாதிபதியால் செல்ல முடியாத சூழல் இருக்கும் தருணத்தில் மக்களின் பிரச்சினைகளுக்கு எவ்வாறு ஜனாதிபதி தீர்வுகளைப் பெற்றுக்கொடுக்கப் போகின்றார் என்பது கேள்விக் குறியானதொரு விடயமாக மாறியுள்ளது. எனவே, மக்களின் போராட்டங்களுக்கு அரசு செவிசாய்க்க வேண்டும். - என செந்தில்தொண்டமான் குறிப்பிட்டுள்ளார்.

# எவர் மீதும் நாம் நம்பிக்கை கொள்ள முடியாது தாய்நாட்டைக் கட்டியெழுப்ப ஒன்றிணைவோம்

## பேராயர் பகிரங்க அழைப்பு

ஊழலால் சீரழிந்துள்ள தாய் நாட்டை மீள கட்டியெழுப்புவதற்கு அனைவரும் ஒன்றிணைந்து பலத்துடன் செயற்பட வேண்டும். அது எம்மால் முடியும் என்றும் பேராயர் தெரிவித்தார்.

கடந்த சனிக்கிழமை இரவு கொழும்பு-கொட்டாஞ்சேனை புனித லூசியாள் தேவாலயத்தில் இடம்பெற்ற விசேட ஆராதனையின் போது இதனைத் தெரிவித்த பேராயர் மேலும் குறிப்பிடுகையில் –

மக்கள் கடும் இன்னல்களை அனுபவிக்கின்றனர். சுயநலத்துக்காகக் கோபமும், விரோதமும் தலை தூக்கியிருக்கின்றன.

இலங்கைக்குள் இந்த நிலைமையை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. இந்த நிலைமையை நாம் என்று மாற்றப் போகின்றோம்? நாம் என்று புதியதொரு தொடக்கத்துக்குச் செல்லப் போகின்றோம்? அது தொடர்பில் சிந்திப்பதற்கான காலம் தோன்றியுள்ளது.

ஊழல் நிறைந்த யுகம் தோற்றம் பெற்றுள்ளது. எம்மால் தொடர்ந்தும் எவர் மீதும் நம்பிக்கை கொள்ள முடியாது.

நாம் எல்லா சந்தர்ப்பங்களிலும் அனைவரையும் ஊழல்வாதிகளாகவே காண்கின்றோம். அதிகாரத்தில் உள்ளவர்கள் மாத்திரமின்றி, அதிகாரம் அற்றவர்கள் கூட ஊழல்வாதிகளாகவுள்ளனர். 74 ஆண்டுகளுக்குள் எமது அழகிய தாய் நாடு சீரழிந்துள்ளது.

பொய்களைக் கூறி ஏமாற்றுதல், நேர்மையற்ற தன்மையின் காரணமாகவே உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல்களை எதிர்கொள்ள வேண்டி யேற்பட்டது.

அதனுடன் தொடர்புடைய விசாரணைகளுக்கும் இந்த நிலைமையே ஏற்பட்டுள்ளது.

ஏமாற்றுதல், பொய் மற்றும் ஊழல் என்பவற்றின் உச்சக்கட்டமே உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களை எதிர்கொண்ட விதமும், அவற்றுடன் தொடர்புடையவர்கள் மற்றும் அதற்கு காரணமானவர்கள் தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்படும் முறைமையுமாகும்.

முழு நாடும் ஏமாற்றப்பட்டுள்ளது. எம் நாட்டு மக்கள் ஏமாற்றப்பட்டவர்களாகியுள்ளனர். நாம் நேர்மையாகச் செயற்பட வேண்டும். வரலாற்றில் பல தவறுகளை இழைத்துள்ளமையை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். நாட்டை மீள கட்டியெழுப்ப வேண்டும். அதற்கு நாம் அனைவரும் ஒன்றிணைந்து பலமடைய வேண்டும். அதனை எம்மால் செய்ய முடியும். – என்றார்.

# ரயிலில் மோதி இளைஞர் வவுனியாவில் தற்கொலை!

வவுனியா ஓமந்தை பகுதியில் ரயிலில் மோதி இளைஞர் ஒருவர் தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

கொழும்பில் இருந்து யாழ்நோக்கி பயணித்த ரயில் ஓமந்தை ரயில் நிலையத்துக்கு அருகில் சென்று கொண்டிருந்த போது மேற்படி சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில் ஓமந்தை அரச ஊழியர் வீட்டுத்திட்டத்தைச் சேர்ந்த 23 வயதான இளைஞர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

இதையடுத்து மேற்படி சம்பவம் தொடர்பாக ஓமந்தை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# தேர்தல், அரசமைப்பு மாற்றம் நெருக்கடிகளுக்குத் தீர்வாகா!

## ரணில் ஆலோசனை

அவசரமாக தேர்தலுக்கு செல்வதன் மூலம் பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காண முடியாது என முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கூறியுள்ளார்.

அத்தோடு அரசமைப்பில் மாற்றத்தைக் கொண்டுவருவதாலும் எதனையும் செய்ய முடியாது என ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றம் தமக்கு ஆதரவளிக்கும் பட்சத்தில் பிரதமர் பதவியை ஏற்கத் தயார் என முன்னாள் பிரதமர் தனிப்பட்ட சந்திப்பொன்றில் தெரிவித்தார் என கூறப்படுகின்றது.

# உயிரிழந்தவர்களைப் போன்று வேடம் அணிந்து ஈஸ்டர் தாக்குதல்களுக்கு நீதிகோரி போராட்டம்

உயிர்த்த ஞாயிறு தின தற்கொலை குண்டு தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டு எதிர்வரும் 21 ஆம் திகதியுடன் 3 ஆண்டுகள் நிறைவடையவுள்ள நிலையில், தாக்குதல்களால் பாதிக்கப்பட்ட சிலர் தமக்கான நியாயத்தைக் கோரி நேற்று (ஞாயிற்றுக்கிழமை) கொழும்பில் வித்தியாசமான முறையில் எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

6 பெண்களும், இளைஞர் ஒருவரும் இறந்தவர்களைப் போன்று ஆடையணிந்து, கறுப்பு நிற பதாதையொன்றில் 'நீதிக்காக' என்று எழுதி அதனை ஆடை மீது அணிந்து கொண்டு இவ்வாறு எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இவ்வாறு நடவடிக்கையில் ஈடுபட்டவர்கள் தமது பெயர்களையும் குறித்த பதாதையில் எழுதி, பிறந்த தினம் மற்றும் இறந்த தினத்தை 2019 ஏப்ரல் 21 என்று குறிப்பிட்டிருந்தனர்.

கொழும்பில் இவ்வாறு ஆடையணிந்து கோட்டை ரயில் நிலையத்திற்கு முன்பாக அமர்ந்து எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

பின்னர் அவர்கள் அங்கிருந்து காலி முகத்திடலுக்குச் சென்றனர். அங்கு ஜனாதிபதி செயலக வளாகத்தில் கொல்லப்பட்ட மற்றும் காணாமல் ஆக்கப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு நியாயம் கோரி, வைக்கப்பட்டிருந்த பதாதைகளுக்கு முன்னால் எதிர்ப்பை வெளிப்படுத்தியமை குறிப்பிடத்தக்கது.

உலகளாவிய ரீதியிலுள்ள கத்தோலிக்க மக்கள் உயிர்த்த ஞாயிறு தினத்தை கொண்டாடிய நிலையில், இலங்கையில் கடந்த 2019 ஆம் ஆண்டு உயிர்த்த ஞாயிறு தினத்தன்று தற்கொலை குண்டு தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்ட கொழும்பு-கொச்சிக்கடை புனித அந்தோனியார் திருத்தலம், நீர்கொழும்பு - கட்டுவாப்பிட்டி தேவாலயம் மற்றும் மட்டக்களப்பு சியோன் தேவாலயம் உள்ளிட்டவற்றில் விசேட ஆராதனைகள் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

SPORTS SCIENCE UNIT
FACULTY OF ALLIED HEALTH SCIENCES
**UNIVERSITY OF JAFFNA**

NEW ENROLMENT FOR THE ACADEMIC YEAR
2021/2022
**BScHons (Physical Education)**

The orientation programme for freshers who have been selected for the academic year 2021/2022 will be commenced on 20.04.2022, Wednesday at 9.00 am and the enrolment will be held same day after the completion of the orientation programme at the Kailasapathy Auditorium, University of Jaffna, Ramanathan Road, Thirunelvelly. All freshers are requested to participate in the orientation programme and enrolment.

Please be present.

**Registrar,**
**University of Jaffna.**

காலைக்கதிர்
Kalaikkathir

# அமைச்சர்கள் பதவியேற்புப் பட்டியல்





ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான ரீலங்கா பொதுஜன பெரமுன அரசு பதவி விலக வேண்டுமென மக்கள் வலியுறுத்திவரும் நிலையில், அந்த கோரிக்கையை ஏற்காது – அரசை தொடர்ந்தும் முன்னெடுக்கும் நோக்கில் புதிய அமைச்சரவையை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நேற்று (18) நியமித்துள்ளார்.

★ அமைச்சரவையின் தலைவராக ஜனாதிபதியும், பிரதமராக மஹிந்த ராஜபக்ஷவும் அமைச்சரவையில் நீடிக்கின்றனர். ஏனைய மூன்று ராஜபக்ஷக்களும் அமைச்சரவையில் இருந்து நீக்கப்பட்டுள்ளனர்.

– இதன்படி புதிய அமைச்சரவையில் பஸில் ராஜபக்ஷ, சமல் ராஜபக்ஷ மற்றும் நாமல் ராஜபக்ஷ ஆகியோருக்கு எவ் வித பொறுப்பும் கையளிக்கப்படவில்லை.

★ இராஜாங்க அமைச்சர்களாக செயற்பட்ட மொட்டு கட்சியின் 11 பேர் அமைச்சரவைக்குள் உள்வாங்கப்பட்டுள்ளனர். அரசமைப்பின் 20ஆவது திருத்தச்சட்டத்தை ஆதரித்த முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர் ஹாபீஸ் நஷீர் அஹமட்டுக்கும் அமைச்சரவை அந்தஸ்த்துள்ள அமைச்சு பதவி வழங்கப்பட்டுள்ளது.

★தினேஷ் குணவர்தன, ரமேஷ் பத்திரண, பிரசன்ன ரணதுங்க, திலும் அமுனுகம ஆகியோரைதவிர, கடந்த அமைச்சரவையில் இருந்த எவரும் புதிய அமைச்சரவையில் இடம்பெறவில்லை. வெளிவிவகார அமைச்சர் பீரிஸ், நிதி அமைச்சர் அலி சப்ரி ஆகியோர் நீடிக்கின்றனர். நீதி அமைச்சு பதவியும் சப்ரியிடம் கையளிக்கப்படலாம்.

★காமினி லொக்குகே, பந்துல குணவர்தன, மஹிந்தானந்த அளுத்கமகே, கெஹலிய ரம்புக்வெல்ல, ரோஹித அபேகுணவர்தன, சரத் வீரசேகர, டலஸ் அழகப்பெரும, பவித்ராதேவி வன்னியாராச்சி, ஜோன்ஸ்டன் பெர்ணான்டோ ஆகிய மொட்டுகட்சியின் முக்கியஸ்தர்கள் பதவியேற்க விரும்பவில்லை. அவர்களுக்கு பதவிகள் வழங்கப்படவும் இல்லை.

★30 நாள்கள் மட்டுமே அமைச்சரவையில் நீடித்த எஸ்.பி. திஸாநாயக்கவுக்கும் எவ்வித பதவியும் வழங்கப்படவில்லை. நுவரெலியா மாவட்டத்தை சேர்ந்த சி.வி. ரத்னாயக்கவும் அமைச்சரவையில் இடம்பெறவில்லை. நாமல் ராஜபக்ஷ வகித்த பதவியை ஏற்குமாறு விடுக்கப்பட்ட அழைப்பை ஜீவன் தொண்டமான் நிராகரித்துவிட்டார்.

★ஓர் அமைச்சருக்கு, இரு விடயதானங்கள் ஒப்படைக்கப்பட்டுள்ளன. கல்வி அமைச்சராக செயற்பட்ட ரிச்சர்ட் பத்திரனவின் மகனான ரமேஷ் பத்திரனவுக்கு கல்வி அமைச்சு பதவி வழங்கப்பட்டுள்ளமை விசேட அம்சமாக கருதப்படுகின்றது.

★அமைச்சரவையில் பெண் பிரதிநிதித்துவம் இல்லை. ஆளுங்கட்சியின் 5 இற்கும் மேற்பட்ட பெண் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அங்கம் வகிக்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

★அரசமைப்பின் 20 ஆவது திருத்தச் சட்டத்தின் பிரகாரம் 30 பேர் கொண்ட அமைச்சரவையை ஜனாதிபதி அமைக்கலாம். எனினும், சுமார் 20 பேர்வரையே அமைச்சரவைக்கு உள்வாங்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

புதிய அமைச்சர்கள் பட்டியல் விவரம் –

★தினேஷ் குணவர்தன – பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளாட்சி மன்ற அமைச்சர்.

★டக்ளஸ் தேவனாந்தா – கடற்றொழில் அமைச்சர்.

★ரமேஷ் பத்திரன – கல்வி மற்றும் பெருந்தோட்டத்துறை அமைச்சர்.

★பிரசன்ன ரணதுங்க – பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர்.

★திலும் அமுனுகம – போக்குவரத்து மற்றும் கைத்தொழில் அமைச்சர்.

★ கனக ஹேரத் – நெடுஞ்சாலைகள் அமைச்சர்.

★விதுர விக்கிரமநாயக்க – தொழில் அமைச்சர்.

★ஜனக வக்கும்புர – விவசாயம் மற்றும் நீர்ப்பாசனம்துறை அமைச்சர்.

★ஹொான் சேமசிங்க – வர்த்தகம் மற்றும் சமுர்த்தி அபிவிருத்தி அமைச்சர்.

★மொஹான் பிரியதர்ன டி சில்வா – நீர் வழங்கல் அமைச்சர்.

★விமலவீர திஸாநாயக்க – வன விலங்குகள் மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு அமைச்சர்.

★காஞ்சனா விஜேசேகர – எரிசக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர்.

★தேனுக விதானகமகே – விளையாட்டு மற்றும் இளைஞர் விவகாரம்

★ நாலக கொடஹேவா – ஊடகத்துறை அமைச்சர்.

★சன்ன ஜயசுமன – சுகாதார அமைச்சர்.

★நஷீர் அஹமட் – சுற்றாடல் துறை அமைச்சர்

★பிரமித பண்டார தென்னகோன் – துறைமுகங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து அமைச்சர்.

சுயாதீனமாக செயற்படபோகிறார் என அறிவிப்பு விடுத்த ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மற்றுமொரு நாடாளுமன்ற உறுப்பினரும், அரசுக்கு நேசக்கரம்நீட்டி இராஜாங்க அமைச்சு பதவியை பெற்றுக்கொண்டுள்ளார்.

★ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசியப்பட்டியல் ஊடாக அதிஉயர் சபைக்கு தெரிவான – சுதந்திரக்கட்சி உறுப்பினரான கலாநிதி சுரேன் ராகவனே, இவ்வாறு கல்வி சேவை மற்றும் கல்வி மறுசீரமைப்பு இராஜாங்க அமைச்சை நேற்று ஜனாதிபதி முன்னிலையில் பெற்றுக்கொண்டுள்ளார்.

★ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் பிரசார செயலாளராக செயற்பட்ட சாந்த பண்டாரவும், அரசுக்கு ஆதரவு வழங்கி விவசாயத்துறை இராஜாங்க அமைச்சு பதவியை பெற்றுக்கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

அந்த வகையில் நாடாளுமன்றத்தில் தற்போது சுதந்திரக்கட்சி பக்கம் 12 எம்.பிக்களே உள்ளனர்.

★அரசமைப்பின் 20ஆவது திருத்தச் சட்டத்துக்கு ஆதரவு வழங்கிய பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அ. அரவிந்தகுமாருக்கும் இராஜாங்க அமைச்சு பதவி வழங்கப்பட்டுள்ளது.

★ ஜீவன் தொண்டமான் வகித்த தோட்ட வீடமைப்பு மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சே அரவிந்தகுமாரிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

★வாசுதேவ நாணயக்கார தலைமையிலான ஜனநாயக இடதுசாரி முன்னணியின் உறுப்பினரும், மொட்டு கட்சியின் மொனறாகலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான கயாஸான் நவனந்த, சுகாதார இராஜாங்க அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார்.

11 கட்சிகளின் சுயாதீன பட்டியலில் இவரின் பெயர் ஆரம்பத்தில் இருந்தாலும், பின்னர் தனது முடிவை மாற்றிக் கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஜனாதிபதி முன்னிலையில் இராஜாங்க அமைச்சர்களாக பதவியேற்றம் செய்துகொண்ட உறுப்பினர்கள் விவரம் வருமாறு,

★பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் – பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர். ( இவர் வெளிவிவகார அமைச்சராகவும் செயற்படுவார்.)

★ரோஹண திசாநாயக்க – உள்ளூராட்சி சபைகள் மற்றும் மாகாண சபைகள் இராஜாங்க அமைச்சர்.

★அருந்திக்க பெர்னாண்டோ – பெருந்தோட்டக் கைத்தொழில் இராஜாங்க அமைச்சர்.

★லொஹான் ரத்வத்த – நகர அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்.

★ தாரக்க பாலசூரிய – வெளிவிவகார இராஜாங்க அமைச்சர்.

★இந்திக்க அனுருத்த – வீடமைப்பு இராஜாங்க அமைச்சர்.

★சனத் நிஷாந்த – நீர் வழங்கல் இராஜாங்க அமைச்சர்.

★சிறிபால கம்லத் – மகாவலி இராஜாங்க அமைச்சர்.

★அனுராத ஜயரத்ன – நீர்ப்பாசன இராஜாங்க அமைச்சர். (முன்னாள் பிரதமர் திமு ஜயரத்னவின் மகன்)

★ சிசிர ஜயகொடி – சுதேச மருத்துவ இராஜாங்க அமைச்சர்.

★பிரசன்ன ரணவீர – கைத்தொழில் இராஜாங்க அமைச்சர்.

★டீ. வீ. சானக்க – சுற்றுலாத்துறை மற்றும் கடற்றொழில் இராஜாங்க அமைச்சர்.

★ டி. பீ. ஹேரத் – கால்நடை வளங்கள் இராஜாங்க அமைச்சர்.

★காதர் மஸ்தான் – கிராமிய பொருளாதார, பயிர்ச்செய்கை அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்.

★அசோக்க பிரியந்த – வர்த்தக இராஜாங்க அமைச்சர்.

★ஏ.அரவிந்த் குமார் – தோட்ட வீடமைப்பு மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சர்.

★கீதா குமாரசிங்க – கலை இராஜாங்க அமைச்சர்.

★குணபால ரத்னசேகர – கூட்டுறவு சேவை, விற்பனை அபிவிருத்தி மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர்.

★கபில நுவன் அத்துகோரள – சிறு ஏற்றுமதி இராஜாங்க அமைச்சர்.

★ கயாான் நவனந்த – சுகாதார இராஜாங்க அமைச்சர்.

– சுரேன் ராகவன் – கல்விச் சேவை மற்றும் கல்வி மறுசீரமைப்பு இராஜாங்க அமைச்சர்.

★டயனா கமகே – போக்குவரத்து இராஜாங்க அமைச்சர்.

★ சீதா அரம்பேபொல – கல்வி மற்றும் தொழில்நுட்ப இராஜாங்க அமைச்சர்,

★விஜித பேருகொட – துறைமுகங்கள் மற்றும் கப்பல்துறை இராஜாங்க அமைச்சர்.

★ சுயாதீனமாக செயற்படுவதாக ஆரம்பத்தில் அறிவித்த பிரியங்கரவும் பின்னர் இராஜாங்க அமைச்சு பதவியில் நீடிக்க தீர்மானித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# சிறுமியை வன்புணர்விற்கு உட்படுத்தி வீடியோ பிடித்து கப்பம் பெற முயற்சி!

## கல்முனையில் இருவர் வசமாகச் சிக்கினர்

(பாறுக் ஷிஹான்)

பதின்மூன்று வயதுச் சிறுமியை வன்புணர்விற்கு உட்படுத்தி வீடியோ ஒன்றைக் காட்டி 10 லட்சம் ரூபா கப்பம் கேட்டு நீண்டகாலமாக மிரட்டி வந்த இரு சந்தேக நபர்களை, அவர்கள் தலைமறைவாக இருந்த நிலையில் கல்முனை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அம்பாறை மாவட்டம் கல்முனை பொலிஸ் பிரிவில் உள்ள சாய்ந்தமருது பகுதியை சேர்ந்த 13 வயதான தனது மகளை 3 சந்தேக நபர்கள் வீடியோ காணொலி ஒன்றினை முன்வைத்து கப்பம் கேட்கின்றனர் எனக் கல்முனை பொலிஸ் நிலையத்திற்கு கடந்த 2022.01.05 அன்று சிறுமியின் தாயாரினால் முறைப்பாடு வழங்கப்பட்டிருந்தது.

பொலிஸார் 3 சந்தேக நபர்களையும் அடையாளம் கண்ட நிலையில் தேடுதல் மேற்கொண்டு வந்தனர். எனினும் சந்தேக நபர்களில் ஒருவரான சாய்ந்தமருது 3 இனை சேர்ந்தவர் டுபாய் நாட்டிற்கு தப்பி சென்ற நிலையில், ஏனைய சந்தேக நபர்களில் கப்பம் கோரியவரான மட்டக்களப்பு ஏறாவூர் பகுதியை சேர்ந்த 33 வயதுடைய சந்தேக நபர் கல்முனை பகுதி உணவகமொன்றில் வைத்து கைது செய்யப்பட்டார். பின்னர் கைதானவரின் தகவலுக்கமைய இச்சம்பவத்திற்கு உடந்தையான செயற்பட்ட மற்றுமொரு 31 வயதுடைய சந்தேக நபர் சாய்ந்தமருது பகுதியில் வைத்து கைதானார்.



கைது செய்யப்பட்ட இரு சந்தேக நபர்களிடமும் பொலிஸார் விசாரணை மேற்கொண்டுள்ளனர். வெளிநாட்டிற்குத் தப்பிச் சென்ற சந்தேக நபரைக் கைது செய்ய நீதிமன்ற நடவடிக்கை ஊடாக சர்வதேச பிடியாணை உத்தரவைப் பெறுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

கைதான சந்தேக நபர்கள் கஞ்சா, ஐஸ் போதைப்பொருள் கடத்தல் மற்றும் விற்பனையுடன் சம்பந்தப்பட்டுள்ளனர் எனப் பொலிஸாரின் ஆரம்ப கட்ட விசாரணையில் இருந்து தெரிய வந்துள்ளது.

## வவுனியாவில் பாழடைந்த கிணற்றில் தவறி விழுந்து சிறுவன் உயிரிழந்தான்

வவுனியா, மதுராநகர் பகுதியில் கட்டில்லாத பாழடைந்த கிணற்றில் தவறி விழுந்து 10 வயது சிறுவன் ஒருவர் மரணமடைந்துள்ளான் என சிதம்பரபுரம் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று மாலை இடம்பெற்ற இச் சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது:-

வவுனியா, மதுராநகர் பகுதியில் ஆடு மேய்த்துக் கொண்டிருந்த 10 வயது சிறுவன் அருகில் காணப்பட்ட கட்டில்லாத பாழடைந்த கிணற்றில் மீன் பிடிப்பதற்காக தூண்டில் போட்ட போது தவறி விழுந்து மரணமடைந்துள்ளான்.

மகனைக் காணவில்லை என தந்தை தேடிச் சென்ற போது மகன் தூண்டிலுடன் கிணற்றில் விழுந்து கிடந்துள்ளான். இதனையடுத்து அயலவர்கள் துணையுடன் மீட்கப்பட்ட போதும் சிறுவன் மரணமடைந்துள்ளான். சம்பவ இடத்திற்கு சென்ற சிதம்பரபுரம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

இந்தச் சம்பவத்தில் 10 வயதுடைய கனசுந்தரம் சம்சன் என்ற சிறுவனே மரணமடைந்தான்.

## அன்னை பூபதியின் வணக்க நாள் அனுஷ்டிப்பு

தமிழ்த் தேசிய எழுச்சியின் வெகுசன வடிவமாக அறப்போர் புரிந்த அன்னை பூபதி அவர்களின் 34 ஆம் ஆண்டு நினைவு வணக்க நாள் நிகழ்வுகள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் அவர்களின் கிளிநொச்சி அலுவலகமான அறிவகத்தில் நேற்று நடைபெற்றது.



சிவஞானம் சிறீதரன் அவர்கள் நினைவுச் சுடரை ஏற்றி அன்னை பூபதியின் திருவுருவப் படத்திற்கு மலர்மாலை அணிவித்தார்.

'இந்தியப் படை உடனடியாகப் போர் நிறுத்தத்தை மேற்கொண்டு தமிழீழ விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுக்களின் ஈடுபட வேண்டும்' – என்று கோரி மட்டக்களப்பு அன்னையர் முன்னணியின் சார்பில் அன்னைபூபதி அவர்கள் அகிம்சை வழியில் உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்தார். 1988 ஆம் ஆண்டு மார்ச் மாதம் பத்தொன்பதாம் திகதி காலை 10.45 மணிக்கு மட்டக்களப்பு அமிர்தகழி சிறி மாமாங்கேஸ்வரர் ஆலயத்தின் முன்றிலில் உள்ள குருந்த மரநிழலின் கீழ்அன்னை பூபதி தனது சாகும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்தார்.

1988ம் ஆண்டு மார்ச் மாதம் 19ம் திகதி சனிக்கிழமை காலை 10-45 மணிக்கு சாகும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்த அன்னை பூபதி அவர்களின் இறுதி மூச்சு காற்றோடு ஏப்பிரல் மாதம் 19ஆம் திகதி காலை 8.45 மணியளவில் கலந்து பரவியது.

### அமைச்சர் பதவி...

(09ஆம் பக்க தொடர்ச்சி...)

எதிர்காலத்திற்கான சாதகமான அடையாளமாகவும் பார்க்கின்றேன்.

இனம், மதம், அரசியல் வேறுபாடின்றி நாட்டை நேசிக்கும் பெரும்பாலான மக்கள் தற்போதைய ஆட்சியின் தவறுகளைத் திருத்தி நாட்டைக் கட்டியெழுப்பவே விரும்புகின்றார்கள், நாட்டைத் தோல்வி அடையச் செய்வதற்கு அல்ல என்று நான் நம்புகின்றேன். எனவே, உங்கள் ஜன நாயகப் போராட்டங்களை வன்முறைப் பாதையில் திசை திருப்ப சந்தர்ப்பவாதிகளுக்கு இடமளிக்க வேண்டாம் என்று இந்த இளைஞர்களிடம் கேட்டுக்கொள்கின்றேன்.

மதிப்புக்குரிய மகாசங்கத்தினர், மத குருமார்கள், தொழில் வல்லுநர்கள், கலைஞர்கள், ஊடகவியலாளர்கள், வெளிநாடுகளில் வாழும் இலங்கையர்கள் மற்றும் பல்வேறு அரசியல் குழுக்களின் உறுப்பினர்கள் உட்பட பலர் நாட்டின் நிலைமை மற்றும் அதற்கான தீர்வுகள் குறித்து கருத்துத் தெரிவித்துள்ளனர். அந்த ஆலோசனைகள் அனைத்தையும் நான் உணர்வுபூர்வமாகக் கேட்கின்றேன்.

அறுபத்து ஒன்பது இலட்சம் மக்கள் தமது வாக்குரிமையைப் பயன்படுத்தி மிகுந்த நம்பிக்கையுடன் என்னிடம் பொறுப்பை ஒப்படைத்தனர். எனது பதவிக்காலத்தில் அந்த எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுவதில் உறுதியாக உள்ளேன். அதன்படி, தற்போதைய நெருக்கடியை மக்கள் எதிர்பார்க்கும் மாற்றத்தை வழங்குவதற்கு ஒரு வாய்ப்பாக எடுத்துக் கொள்கின்றேன்.

இந்த நாட்டு மக்களின் பணத்தை நான் திருடியதில்லை. அன்றும் இன்றும் என் கைகள் சுத்தமாகவே உள்ளன. நான் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டது பலரது கோரிக்கைகளுக்காகவே அன்றி அதிகார தேவைக்காக அல்ல. எனது வாழ்நாளில் முப்படையில் அதிகாரியாக 20 ஆண்டுகள் இந்த நாட்டுக்குச் சேவை செய்துள்ளேன். நான் வெற்றிகரமாக சேவை செய்துள்ளேன். அத்துடன், பாதுகாப்புச் செயலாளராக நான் இந்த நாட்டுக்கு வெற்றிகரமாக சேவையாற்றியுள்ளேன். நகர அபிவிருத்தி அமைச்சின் செயலாளராகவும் அர்ப்பணிப்புடன் கடமையாற்றியுள்ளேன்.

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஜனாதிபதி என்ற முறையில், அரசமைப்பு மற்றும் ஜனநாயகத்தின் கட்டமைப்புக்குள் நான் எப்போதும் செயற்படுகின்றேன்.

நாட்டின் சட்டமியற்றும் அதிகாரம் நாடாளுமன்றத்துக்கு உள்ளது. எனவே, அரசமைப்பில் ஏற்படுத்த வேண்டிய மாற்றங்கள் குறித்து பல்வேறு அரசியல் கட்சிகள் தெரிவித்த கருத்துக்களை நாடாளுமன்றத்தில் கலந்துரையாடி தேவையான மாற்றங்களை நிறைவேற்ற வாய்ப்பு உள்ளது. அது தொடர்பில் அவசியமான ஒத்துழைப்பை எந்த நேரத்திலும் நாடாளுமன்றத்துக்கு வழங்குவதற்கு நான் தயாராக உள்ளேன்.

அதற்கிணங்க, நாட்டின் அதியுயர் அரசமைப்புக்கு மதிப்பளித்து, எதிர்காலத்தில் தேவையான மாற்றங்களைச் செய்து, இந்த நெருக்கடியிலிருந்து நாட்டை விடுவிப்பதாக நான் உறுதியளிக்கின்றேன், மேலும் இது தொடர்பாக மக்களுக்குத் தேவையான ஆதரவை வழங்குமாறு நான் உங்கள் அனைவரிடமும் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

மீண்டும் ஒருமுறை உங்களை வாழ்த்துகின்றேன். மேலும் மக்கள் எதிர்பார்ப்பது போல் நேர்மையாகவும், திறமையாகவும், தூய்மையாகவும் மக்களுக்குச் சேவை செய்ய வேண்டும் என்று நான் மீண்டும் உங்களிடம் கேட்டுக்கொள்கின்றேன். உங்கள் அனைவருக்கும் மும்மணிகளின் ஆசிகள் – என்றார்.

### நாடாளுமன்றத்தின்...

(8ஆம் பக்கத் தொடர்ச்சி...)

சிறப்பரிமைகளின் பாதுகாவலர். படைக்கல சேவிதர் அவருடைய கட்டளைகளை அமுல்படுத்த சட்டப்பூர்வமாக அனுமதியளிக்கப்பட்ட பிரதான நிறைவேற்றுனராவார்.

செங்கோலின் பாதுகாவலர் என்ற ரீதியில் படைக்கல சேவிதரானவர் நாடாளுமன்ற அத்திபாரத்தின் சின்னமாக உள்ள சம்பிரதாய ஆபரணமான செங்கோலை பாதுகாக்கின்றவராகக் காணப்படுகிறார். படைக்கல சேவிதர் நாடாளு மன்ற வளாகத்தின் முழுமை பாதுகாப்புக்கும் பொறுப்பாக இருப்பதோடு அது வன்முறை, விபத்து, தீ ஆகிய ஆபத்துகளற்றதாக இருப்பதை உறுதிப்படுத்தவும் பொறுப்பாக இருப்பார். அவருடைய கடமைகளை செய்வதற்கு 225 பேரைக் கொண்ட நாடாளுமன்றப் பொலிஸ் பிரிவு அவருக்குத் துணை புரியும். அறிமுகமில்லாதவர்களை நாடாளுமன்ற வளாகத்தினுள் அனுமதிக்கும் பொறுப்பு படைக்கல சேவிதரின் பொறுப்பாகும். பார்வையாளர் கூடங்களை மேற்பார்வை செய்பவர் என்ற ரீதியில் கலரிக்கு வருகைத் தரும் மக்களுக்கு அனுமதி சீட்டுகளை விநியோகிப்பதுடன் அவர்கள் ஒழுங்காக உடையணிந்து, ஒழுக்கமாக மரியாதையுடன் நடந்து கொள்கிறார்களா என்பதையும் படைக்கல சேவிதர் உறுதி செய்துக் கொள்ள வேண்டும்.

இருப்பிட வசதிகளை செய்து கொடுப்பவர் என்ற ரீதியில் அலுவலக அறைகள் செயற்குழுக்கான அறைகள். நேர்காணலுக்கான அறைகள், வசதிகள் ஆகியவற்றை வழங்குதல் மற்றும் அதற்கான நிர்வாகங்கள் என்பவற்றுக்கு பொறுப்பாக படைக்கல சேவிதர் இருப்பார். சர்வதேச தொடர்புகள் என்ற ரீதியில் படைக்கல சேவிதர் பொதுநலவாய நாடுகளின் நாடாளுமன்றங்களின் படைக்கல சேவிதர் சங்கத்தின் உறுப்பினராவார். எனவே நாடாளுமன்றங்களின் படைக்கல சேவிதர் சங்கத்தின் உறுப்பினராவார். நாடாளுமன்றங்களின் முகாமைத்துவத்தில் ஏற்படும் நவீன அபிவிருத்திகளை அறிந்துகொள்ளும் பொருட்டு அவர் அடிக்கடி அதன் கூட்டங்களில் கலந்து கொள்வார்.